Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 105 | வியாழக்கிழமை | மாசி 27 ஆம் நாள் 11 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 24 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## ஊர்காவற்றுறையில் 141 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுவைதீவு பகுதியில் நேற்றுக் காலை 141 கிலோ கஞ்சா மீட்கப் 23 ›

# இஸ்லாமிய அரசமைக்கவே ஈஸ்டர் தாக்குதல் நடந்ததாம்

### நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் சரத் வீரசேகர



கொழும்பு, மார்ச் 11
இஸ்லாமிய அரசைக் கட்டியெழுப்பவே சஹ்ரான் ஈஸ்டர் தினத்தன்று தற்கொலைக் குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளார். அவர் வன்னி, மதவாச்சி, தியவெல்ல, அம்பாந்தோட்டை, நுவரெலியா மற்றும் ஹிங்குல உள்ளிட்ட பகுதிகளில் நடத்திய 8 பயிற்சி முகாம்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், ஈஸ்டர் தாக்குதலுக்கு தலைமை வகித்த சஹ்ரானை, மொஹமட் நௌப்பர் என்பவரே கருத்தியல் ரீதியில் இயக்கியுள்ளார். இதேவேளை தாக்குதலைத் தடுப்பதற்கு இருந்த 9 சந்தர்ப்பங்களை கடந்த அரசு தவறவிட்டுள்ளது. 23 ›

## சுகாதார முறைகளுடன் இன்று சிவராத்திரி!

யாழ்ப்பாணம், மார்ச் 11
இந்துக்களின் மிக முக்கிய வழிபாடுகளில் ஒன்றான சிவராத்திரி விரதம், கொரோனா அச்சத்துக்கு மத்தியிலும் பக்தி பூர்வமாக இன்று கடைப்பிடிக்கப்படுகின்றது.
வரலாற்றுப் பிரசித்திபெற்ற மன்னார் திருக்கேதீச்சரம், யாழ்ப் 23 ›



## சா/த பெறுபேறுகள் ஜூனில் வெளிவரும்

கல்வி அமைச்சர் உறுதி

கொழும்பு, மார்ச் 11
நேற்று நடைபெற்று முடிவடைந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை ஜூன் மாதம் வெளியிட முடியும் என்று கல்வி அமைச்சர் 23 ›

## ஐ.நா.வின் வரைவால் தமிழருக்குத் துன்பம்

கொழும்புக்கு அவகாசம் வழங்குகிறது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அதிருப்தி

ஜெனிவா, மார்ச் 11
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துன்பத்தையும், இலங்கை அரசுக்கு வெகுமதியையும் மேலதிக நேரத்தையும் வழங்கும் விதமாக அமைந்துள்ளது என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் 23 ›

## கிளிநொச்சி விபத்தில் இளைஞன் பரிதாபப் பலி

கிளிநொச்சி, மார்ச் 11
கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயி 22 ›

## கோண்டாவில் சாலைக்குள் கொரோனாப் பெருந்தொற்று

### தனிக் கொத்தணியாகிறதா?

யாழ்ப்பாணம், மார்ச் 11
இலங்கை போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலையில் பணிபுரியும் எட்டுப் பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், பிறிதொரு கொத்தணி போக்குவரத்துச் சபையின் சாலைக்குள் ஏற்படுமோ என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. 22 ›



முச்சந்தி முனி

"அப்ப முஸ்லிம் மக்களை ஒடுக்க இவை புதிசா ஒரு சாட்டு கண்டுபிடிச்சிட்டினம் பாருங்கோ"

## குற்றவாளிகளைப் பாதுகாத்தால் சர்வதேச நீதிமன்றமே ஒரே வழி!

அரசுக்கு பேராயர் மீண்டும் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 11
'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் நீதியைப் பெற்றுத்தருவோம் என்று நாட்டு மக்களுக்கு அரசு உறுதியளித்திருந்தது. எனவே, அரசியல் நலன் கருதி குற்றவாளிகளைப் பாதுகாக்கும் விதத்தில் அரசு செயற்படக் கூடாது' இவ் 23 ›

## வடக்கில் நேற்று தொற்று 27

யாழ்ப்பாணம், மார்ச் 11
வடக்கு மாகாணத்தில் மேலும் 27 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். அவர்களில் 20 பேர் யாழ்ப் 22 ›

## மன்னார் திருக்கேதீச்சரத்தில் பாலாவி இல்லாத சிவராத்திரி!

### கண்காணிப்பில் 500 பொலிஸார்

மன்னார், மார்ச் 11
வரலாற்றுப் பிரசித்திபெற்ற மன்னார் திருக்கேதீச்சரத்தில் இன்று நடைபெறவுள்ள மகா சிவராத்திரி திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்று திருக்கேதீச்சர திருப்பணிச் சபையினர் தெரிவித்தனர். மன்னார் மாவட்டத்தில் கொரோனாக் கொத்தணி உருவாகாமல் இருப்பதற்காக மன்னார் சுகாதாரத் துறையினரின் சுகாதார ஆலோசனைக்கு 22 ›

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேசக்குழு விசாரிக்கட்டும்!

ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 11

**சர்வதேச சுயாதீன விசாரணைக்குழுவொன்றை அழைத்துவந்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தினார்.**

யிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர் ல் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை றிக்கை தொடர்பில், நாடாளுமன் த்தில் நேற்று நடைபெற்ற சபை த்திவைப்புவேளை பிரேரணை தான விவாதத்தில் உரையாற்று கயிலேயே அவர் இவ்வாறு தெரி த்தார்.

வர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்ப த்தின் பின்னணி என்ன? பிரதான த்திரதாரி யார்? என்பவை தொடர் ல் அறிக்கையில் எதுவும் குறிப்பிட படவில்லை. தாக்குதலை தடுத்து றுத்துவதற்குத் தவறியவர்கள் தாடர்பிலேயே சுட்டிக்காட்டப்பட்டு ளது.

ஹ்ரானை கைதுசெய்வதற்கு ரி.ஐ.டியின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த நாலக சில்வா தயாரானார். அப்போது அவருக்கு எதிராக திடீரென்று குற்றச்சாட்டு வந்தது. அவர் கைதுசெய்யப்பட்டார். அதன் பின்னர் ஷானி அபேசேகரவும் முடக்கப்பட்டார். எனவே, இதன் பின்னணியில் ஏதோ மர்மம் உள்ளது. விசாரணையை மறைப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது. குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்று குற்றம் சாட்டப்படும் சாரா எங்கே? அவரை உடன் நாட்டுக்கு கொண்டுவர வேண்டும்.

ஐ.எஸ். அமைப்புக்கு 2015 இல் ஒருவரே சென்றிருந்தார். சம்பவத்தின் பின்னணியில் ஐ.எஸ். அமைப்பு இருக்காது. இந்தியாவிலிருந்து ஒருவர் இயக்கியிருக்கக்கூடும் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது.

ஹக்கீம் மற்றும் ரிஷாத் ஆகியோரை விமர்சிப்பவர்கள், 20க்கு ஆதரவாக அவர்களின் கட்சி உறுப்பினர்களின் வாக்குகளைப் பெறுகின்றனர். இதன்மூலம் அரசின் இரட்டை நிலைப்பாடு அம்பலமாகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை வைத்து இந்த அரசே நன்மை அடைந்தது. தாக்குதலுக்கு அவர்களும் பொறுப்புக்கூற வேண்டும். உண்மையை மூடி மறைப்பதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது. எனவே சுயாதீன சர்வதேச குழுவை அழைத்து வந்து இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோருகின்றோம்." - என்றார். (த-44)

## பன்றித்தலைச்சி அம்மனுக்கு பொங்கலிடுவோர் பதிவுசெய்க!

கோவில் தர்மகர்த்தா அறிவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 11

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவிலில் பொங்கலிடவுள்ள அடியார்கள் முன்கூட்டியே கோவில் நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு பதிவுசெய்ய வேண்டும். கோவிலில் பதிவுசெய்து அனுமதிச்சீட்டுப் பெற்றவர்கள் மாத்திரமே பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தில் பொங்கல் செய்ய அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவிலுக்கு வரும் அடியார்கள் கட்டாயம் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி வழிபாடுகளில் ஈடுபடல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

கோவில் வளாகத்தில் அர்ச்சனைப் பொருள்கள் விற்பனை நிலையத்தைத் தவிர்ந்த எந்தவொரு வியாபார நிலையமும் இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அன்னதானம் வழங்குவதும் தவிர்க்கப்பட்டுள்ளது என்று கோவில் தர்மகர்த்தா அறிவித்துள்ளார்.

கோவிலில், எதிர்வரும் 15, 22 மற்றும் 29 ஆம் திகதிய திங்கட்கிழமைகளிலும் ஏப்ரல் 5 மற்றும் 12 ஆம் திகதிய திங்கட்கிழமைகளிலும் அதிகாலை 5 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ளது. இந்த நேரத்தில் அடியார்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்ற முடியும் என்றும் கோவில் தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (த-9)

## இலங்கையர் இருவர் தமிழகத்தில் கைது

மன்னார், மார்ச் 11

இந்திய கடற்பரப்பில், படகுடன் இலங்கையர்கள் இருவர் தமிழக கடலோர காவல் குழும பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இலங்கையிலிருந்து கடத்தல் பொருள்களுடன் வந்தனரா என்பது குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மன்னார், பேசாலை பகுதியைச் சேர்ந்த அருள் குரூஸ், ரேகன் பாய்வா ஆகியோரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இலங்கையிலிருந்து மீன் பிடிக்க வந்து எல்லை தெரியாமல் இந்திய எல்லைக்குள் வந்தனரா? அல்லது இலங்கையிலிருந்து தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்தனரா?, அல்லது நடுக்கடலில் தமிழக விசைப்படகில் இருந்து சமையல் மஞ்சள் மூடைகளை வாங்குவதற்காக வந்தபோது இந்தியக் கடற்படையிடம் சிக்கினரா என்ற கோணத்தில் மத்திய, மாநில உளவுத் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (த-56)

## இறைச்சி, மீன் சந்தைகளுக்கு இன்று தடை

ரிநொச்சி, மார்ச் 11

ன்று மகா சிவராத்திரி விரதம் கடைப்பிடிக்கப்பட ள்ள நிலையில், கரைச்சி பிரதேச சபையின் ஆளு கக்கு உட்பட்ட பொதுச் சந்தைகளில் அனைத்து கை இறைச்சிக் கடைகள், மீன் கடைகள் மற்றும் ால் களங்கள் அனைத்தும் இன்று பூட்டப்பட வேண் ம் என்று கரைச்சி பிரதேச சபை தெரிவித்துள்ளது. பையின் நேற்றைய அமர்வில் இந்தத் தீர்மானம் டுக்கப்பட்டது என்று கரைச்சி பிரதேச சபையின் தவி ளர் வேழமாலிகிதன் தெரிவித்தார். (த-இ)

## நாவற்குழி திருவாசக அரண்மனையில் 108 சிவலிங்கங்களுக்கும் இன்று முழுநேர அபிஷேகம்!

யாழ்ப்பாணம், மார்ச் 11

தென்மராட்சி நாவற்குழியில் அமைந்துள்ள 'சிவபூமி திருவாசக அரண்மனை'யில் இன்று நடைபெறவுள்ள சிவராத்திரி விழாவில், 108 சிவலிங்கங்களுக்கும் வழமைபோல் பக்தர்கள் தங்கள் கரங்களால் அபிஷேகம் செய்யலாம் என்று திருவாசக அரண்மனையின் நிர்வாகசபை தெரிவித்துள்ளது. இன்று வியாழக்கிழமை காலை 5 மணி தொடக்கம் நாளை வெள்ளிக்கிழமை காலை 5 மணி வரை பக்தர்கள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய தங்கள் வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும். காலை தொடக்கம் தொடர்ந்து திருவாசகம் ஒலித்தவண்ணம் பக்தர்கள் தம் நேர்த்தியை நிறைவேற்றலாம் என்றும் நிர்வாக சபை தெரிவித்துள்ளது. (த-இ)

## ங்கள, பௌத்த வாக்குகளால் இனி வெற்றிபெற முடியாது!

றுகின்றார் பொன்சேகா

காழும்பு, மார்ச் 11

டுத்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள, பௌத்த ாக்குகளால் மாத்திரம் வெற்றிபெற முடியாது என்று ரச தரப்பு தற்போது உணர ஆரம்பித்துள்ளது. இத ால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் உண்மை ன பின்புலம் மற்றும் சஹ்ரானின் செயற்பாடுகள் றைக்கப்படக் கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் டாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் கா தெரிவித்தார்.

டாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் வர் மேலும் தெரிவித்ததாவது:

ரச தரப்புக்குள், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ங்கள பௌத்த வாக்குகளால் மாத்திரம் வெற்றிபெற டியாது. எனவே, சிறுபான்மையின மக்களின் வாக் களைப் பெறக்கூடிய நபரொருவரை வேட்பாளராக ாமிறக்க வேண்டுமென்று பேசப்படுகின்றமையை றிய முடிகிறது. ஆகவே, சிறுபான்மையினரின் ாக்குளைப் பெற்றுக்கொள்ள சஹ்ரானின் விடயங் ளை மறைக்கின்றனர். எமது அரசு அமைந்ததும் ந்தோலிக்க மக்களுக்கு உண்மையான நீதியைப் பற்றுக் கொடுப்போம்." - என்றார். (த-44)

# இறுதிப் போர் கொடூரங்கள்தான் சிறிலங்காவின் போர் விதிகளா?

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் குகதாஸ் கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 11

"இறுதிப் போரில், சுதந்திரபுரம் தொடங்கி வெள்ளைக் கொடி வரை நடைபெற்றவை சிறிலங்கா படைகளின் போர் விதி முறையா? அல்லது சர்வதேச போர் விதி முறையா? " என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், ரெலோவின் இளைஞர் அணித் தலைவருமான சபா குகதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார். அவர் நேற்று விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, "இறுதிப் போரில் தாங்கள் போர் விதிமுறைகளைப் பின்பற்றினோம். மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இறுதி நடவடிக்கைகளைப் பார்க்காதவர்கள்தான் போலியான போர்க் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்." என்று கூறியுள்ளார்.

ஆனால், இறுதிப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது விசுவமடு நோக்கி சிறிலங்கா படைகள் வந்த பின்னர், பொதுமக்களை சுதந்திரபுரம் பகுதியில் தங்குமாறும் இந்தப் பகுதி 'சூட்டுத் தவிர்ப்பு வலயம்' என அறிவித்தும் உலங்கு வானூர்தி மூலம் துண்டுப் பிரசுரங்களை வீசினார்கள். இதனை நம்பி மக்கள் அந்த வலயத்தில் ஒன்று திரண்ட பின்னர் இராணுவம் நடத்திய தாக்குதலில் எத்தனை ஆயிரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்?.

உலகில் தடைசெய்யப்பட்ட வெடி குண்டான 'கிளஸ்டர்' குண்டைப் (கொத்துக் குண்டு) பயன்படுத்தி ஆனந்தபுரம், இரணைப்பாலை, புதுமாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், இரட்டைவாய்க்கால் மற்றும் முள்ளிவாய்க்கால் போன்ற இடங்களில் எத்தனை ஆயிரம் மக்களைக் கொன்றீர்கள்?

வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த அப்பாவிப் பொதுமக்கள் மன்றாடி, அபயக்குரல் எழுப்ப உங்கள் கட்டுப்பாட்டில் வைத்து அவர்களைச் சுட்டுப் படுகொலை செய்தீர்கள். இவை எல்லாம் உங்கள் அகராதியில் போர் விதிமுறையா?

தொடர்ந்து நீதியின் கதவுகள் நிரந்தரமாக மூடியிருக்கமாட்டாது. நிச்சயம் திறக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (த-20)

ஈஸ்டர் தாக்குதல்

# கோத்தாவிடம் விசாரணை நடத்தாமை பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகிறது

## ஐக்கிய மக்கள் சக்தி காட்டம்

**கொழும்பு, மார்ச் 11**

**பாதுகாப்புச் செயலாளராக இருந்தவரே தற்போது ஜனாதிபதியாக இருக்கிறார். அவரிடம் ஆணைக்குழு ஏன் வாக்குமூலம் பெறவில்லை. இது எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அத்துடன் ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை. ஒரு சிலரின் பெயரைக் குறிப்பிட்டு விசாரணையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான முயற்சிகளே இடம்பெறுகின்றன. இதனை அனுமதிக்க முடியாது.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோசன் பெரேரா தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி யாரென கண்டுபிடிக்குமாறு வலியுறுத்தினோம். சம்பவம் நடைபெற்று 2 வருடங்கள் ஆகப்போகின்றன. இன்னும் கண்டறியப்படவில்லை. ஒரு சிலரின் பெயரைக்க குறிப்பிட்டு, சஹ்ரானுடன் இந்தப் பிரச்சினை யையும் புதைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதற்கு அனுமதி வழங்க முடியாது. சஹ்ரான் 10 தேங்காய்களைக் களவாடியிருந்தாலோ அல்லது ஒருவரைக் கொலை செய்துவிட்டு பயணப்பையில் போட்டுச் சென்றிருந்தாலோ விசாரணைகள் விரைவில் இடம்பெற்றிருக்கும். சஹ்ரான் விவகாரம் குறித்து ஆழமாக ஆராயப்படவில்லை. சஹ்ரானுடன் புலனாய்வுப் பிரிவுக்கு இருந்த தொடர்பு என்ன? அரசால் சஹ்ரானுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதா என்பவை குறித்தும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். ஆணைக்குழு அறிக்கையில் 80 ஆவது பிரிவில் 2009 ஆம் ஆண்டிலிருந்து சஹ்ரான் தொடர்பில் விசாரிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் உரியவகையில் இடம்பெற்று, சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதனை விடுத்து அரசியல் இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்கான விளையாட்டை, இவ்விடயத்திலும் விளையாடக்கூடாது - என்றார். (ஒ-44)



# ஏப்.21 குற்றவாளிகளை காப்பாற்ற அரசு முயற்சி

## கூறுகிறார் விமல்

கொழும்பு,மார்ச் 11

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடையவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசு முயற்சிக்கின்றது. எனினும் குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய பலரை, தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், காப்பாற்றுவதற்கு முயற்சித்து வருகின்றனர்.


தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளும் தொடர்ந்தும் மறைக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

(க-இ)

# மரண அறிவித்தல்

## திரு. நாகநாதர் சிவஞானம் (ராசா)

### (ஓய்வுபெற்ற CTB காப்பாளர்)



அன்னை மடியில் 07.06.1943

இறைவனடியில் 10.03.2021

ஏழாலை மேற்கு, புளியங்கிணத்தடி சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் 76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் (மிலேனியம் விருந்தினர் விடுதி) கொண்டிருந்த திரு.நாகநாதர் சிவஞானம் (ராசா) அவர்கள் நேற்று (10.03.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர் பாறூப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற நல்லதம்பி ஞானாம்பிகையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பவளக்கொடியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சீவரத்தினம், கனகமணி, காலஞ்சென்ற சிவலிங்கம், சிவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஞானம்மா, சரஸ்வதி, கந்தசாமி, மற்றும் சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தங்கேஸ்வரி, மகாராசா, நாகேஸ்வரி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தரூபன், சாந்தினி (மிலேனியம் விருந்தினர் விடுதி), ஜெயரூபன் (London), ஜெயந்தினி (Canada), சிவரூபன் (London), கஜரூபன் (London-Thurkas Exports) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகௌரி, சுகுமாரன் (மிலேனியம் விருந்தினர் விடுதி), எழிலரசி (London), அருட்செல்வன் (Canada), மிதுனாலினி (London), மடோனா (London) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஸ்னுஜா, துஸ்ஜா, சானுகா, வனோஜ், நிவேஸ், மானஸ்வி, கரிகாலன், பவன்னா, அஷ்சயா, அகல்யா, சாயுரி, நிவேதி, சேயுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2021) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இராமநாதன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பின் ஏழாலையில் அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் ஏழாலை மேற்கு உசத்தியோடை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**சாந்தரூபன் குடும்பம்**
**சுகுமாரன் சாந்தினி குடும்பம்**
**ஜெயரூபன் குடும்பம்**
**அருட்செல்வன் ஜெயந்தினி குடும்பம்**
**சிவரூபன் குடும்பம்**
**கஜரூபன் குடும்பம்**

**மிலேனியம் விருந்தினர் விடுதி**

**077 6016 310, 077 243 1310, 021 222 5876**

# ஈஸ்டர் தாக்குதலை ராஜபக்சவினர் தேர்தல் கருவியாக மாற்றியுள்ளனர்

## முன்னாள் எம்.பி பிமல் குற்றச்சாட்டு

**கொழும்பு, மார்ச் 11**


**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை தேர்தலில் வெற்றிபெறுவதற்கான கருவியாக ராஜபக்சவினர் பயன்படுத்தியுள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய புதிதாக எதுவும் செய்யவில்லை. 60 ஆயிரம் பக்க அறிக்கையின் 20 ஆயிரம் பக்கங்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. முக்கிய குற்றவாளிகளை இவ் அறிக்கை வெளிக்கொண்டுவரவில்லை.

சஹ்ரான்தான் முக்கிய தற்கொலைக் குண்டுதாரி என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

உளவுத்துறை, தீவிரவாத அமைப்புகளுக்கு பணம் கொடுத்தது என்ற உண்மையை பல ஆண்டுகளுக்கு முன்பு, மஹிந்த ராஜபக்ச ஏற்றுக்கொண்டார்.

இருப்பினும் இந்த உண்மை தொடர்பில் ஆணைக்குழு தற்போதைய பிரதமரிடமோ அல்லது தற்போதைய ஜனாதிபதியிடமோ எந்த அறிக்கைகளையும் பதிவு செய்யவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)





# யாழ். பல்கலைக்கழகத்தில் விசிறப்பட்டது தொற்று நீக்கி

## பலருக்கு தனிமை

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் மாணவ ஒழுக்காற்று அதிகாரிகளில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக பல்கலையில் நேற்று தொற்றுநீக்கி விசிறப்பட்டது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் வழிகாட்டல்களுக்கு அமைய, பல்கலைக்கழக கொவிட்-19 தொற்றுப் பரவல் தடுப்புச் செயலணியினர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மாணவ ஒழுக்காற்று அதிகாரி கடமை நிமித்தம் பல்கலை கழகத்தினுள் நடமாடிய அனைத்து இடங்களிலும் தொற்று நீக்கி விசிறப்பட்டது. அத்தோடு மாணவ ஒழுக்காற்று அதிகாரி அலுவலகத்தில் பணிபுரியும் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களிடம் நேற்றுக் காலை பி.சி.ஆர். பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

அதேநேரம், கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் குறித்த மாணவ ஒழுக்காற்று அதிகாரியும் கலந்துகொண்டிருந்ததால், அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் பலர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் அவர்கள் அனைவரையும் கட்டம் கட்டமாக பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ப)

# வவுனியா ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களுக்கு அழைப்பில்லை

## *விவசாய சம்மேளனத் தலைவர் அதிருப்தி*

வவுனியா, மார்ச் 11

வவுனியா மாவட்ட பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு விவசாயத் துறை சார்ந்த பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை என மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் சேதுகாவலர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு இம்முறை மாத்திரமே எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. செட்டிகுளம், நெடுங்கேணியில் இடம்பெற்ற கூட்டங்களுக்கு எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதன் தொடர்ச்சியாக மாவட்ட மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கும் அழைப்பு விடுக்கப்படாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படாமையால் அவர்கள் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை வெளிப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குளங்கள் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் இங்கு உள்ளன. எனவே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு விவசாயிகளது பிரச்சினைகளை வெளிப்படுத்தி அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் எமக்கு ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (வ-110)

### உருளைக்கிழங்குக்கான

# கொள்வனவு விலையை அதிகரிக்க நடவடிக்கை

கொடிகாமம்,மார்ச் 11

உள்ளூர் விவசாயிகளின் நலன்கருதி உருளைக்கிழங்குக்கான கொள்வனவு விலையை அதிகரிக்க பிரதமர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த நிதி மூலதனச்சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலிடம், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் விடுத்த கோரிக்கைக்கு அமைய நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிதி ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் இது தொடர்பில் விவாதிக்கப்பட்டது. அதனடிப்படையில் எதிர்காலத்தில் லங்கா சதொச நிறுவனத்தால் உருளைக் கிழங்கு கிலோ 100 தொடக்கம் 110 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனூடாக உள்ளூர் விவசாயி கள் ஊக்கத்துடன் உருளைக் கிழங்கு செய்கையில் ஈடுபடுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஜ-159)

# மணல் ஏற்றிய டிப்பர்களின் அனுமதிப்பத்திரம் சோதனை

கிளிநொச்சி, மார்ச் 11

மணல் ஏற்றி வந்த டிப்பர் ரக வாகனங்கள் ஏ-9 வீதி இரணைமடுச் சந்திக்கு அருகிலுள்ள கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் முன்னால் வைத்துப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் அனுமதிப்பத்திரங்கள் பரிசோதிக்கப்பட்டன.

மணல் ஏற்றுவதற்குரிய எத்தனை வழித்தடங்களுக்கு அனுமதி பெறப்பட்டது, எத்தனையாவது வழித்தடத்தில் தற்போது வாகனம் பயணிக்கிறது போன்ற விபரங்கள் மணல் ஏற்றும் குவாரியில் இருந்து வாகனம் புறப்படும் போது வாகனத்தின் பின்பக்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் இவை பின்பற்றப்படுவதில்லை என்பதால் அவற்றை நடைமுறைப்படுத்துமாறு மணல் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள டிப்பர் ரக வாகனச் சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் பணியாற்றும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-12)

# பரீட்சை மத்திய நிலையங்களில் பொலிஸார் விசேட கடமை

வவுனியா,மார்ச் 11

வவுனியாவில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நடைபெற்ற மத்திய நிலையங்களைச் சுற்றி பொலிஸார் விசேட கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி நேற்றுடன் நிறைவடைந்தது.

பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 6 லட்சத்து 22 ஆயிரத்து 355 பரீட்சாத்திகள் தோற்றியிருந்தனர். பரீட்சை நிறைவடைந்ததும் பரீட்சை நிலையத்திலோ அல்லது பரீட்சை



வளாகத்திலோ குழப்பங்களில் ஈடுபடும் பரீட்சாத்திகளின் பெறுபேறுகள் ரத்து செய்யப்பட்டு, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது.

அதனடிப்படையில் நேற்று மதியம் பரீட்சை முடிவடைந்த நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள அனைத்துப் பரீட்சை நிலையங்களிலும் பொலிஸார் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன், பரீட்சை நிலையங்களுக்கு முன்பாக ஒன்று கூடிய மாணவர்களை வீட்டுக்குச் செல்லுமாறு பணித்தனர். (ப-110)

## நவயுக நீரோ!

உரோமின் ஐந்தாம் பேரரசனான நீரோ பெரும் கொடுங்கோலன். நெருப்புப் பற்றியெரிவதைக் காண்பதில் அலாதியான ஈடுபாடும் பிரியமும் உடையவன். அதேபோல் பிடில் வாசிப்பதும் நீரோவுக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு. இவன் ஒரு நாள் தன் சொந்த நாடான உரோமின் ஒரு பகுதிக்குத் தீ வைத்துவிட்டு அது பற்றியெரிவதைப் பார்த்த வண்ணம் ஒரு மலைப்பாங்கான இடத்தில் இருந்து பிடில் வாசித்து இரசித்துக் கொண்டிருந்தானாம். தன் குடியிருப்பும் உடைமைகளும் தமது மன்னனாலேயே தீக்கிரையாக்கப்பட்டதைப் பார்த்து கனன்றது உரோமானியம். அன்றைய உரோமின் நிலையெதுவோ அதுதான் இன்றைய இலங்கையின் நிலை. அன்றைய உரோமானியர்களின் நிலை இன்றைய சிறுபான்மையினரின் நிலை.

இன்று இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்குமுறைகள் கொஞ்சநஞ்சமல்ல. மிகப் பரவலானவை – தீவிரமானவை. ஆயுதப்போர் இலங்கையில் வியாபித்திருந்த போது, தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த, அடக்குமுறைகள் ஆயுதப் போரின் பின்னரும்கூட அப்படியே தொடர்கின்றன. குறிப்பாக பௌத்தமயமாக்கலும் உச்ச வேகத்தில் தமிழர் தாயகத்தில் வலிந்து திணிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றது. அதுபோல காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், காணிவிடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை என்பவற்றை கொழும்பு தற்போது என்ன கோணத்தில், என்ன பார்வையில் கையாள்கின்றது என்பதைச் சொல்லித்தான் புரியவைக்க வேண்டும் என்பதல்ல. தமிழர்களின், குறிப்பாக இந்துக்களின் புராதன ஆலயங்கள் இருந்த இடங்களையெல்லாம் தொல்லியல் என்ற பெயரில் விகாரைகளாக மாற்றிக்கொண்டிருக்கிறது இப்போதைய அரசு. வெடுக்குநாறிமலை, குருந்தூர் மலை, உருத்திரபுரம் சிவன் கோயில் , நீராவியடிப் பிள்ளையார் என்று இந்தப் பட்டியல் நீள்கின்றது.


தமிழர்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம்கள், மலையக உறவுகள் ஆகியோருக்கும் கோத்தாபய அரசின் தற்போதைய ஆட்சி துர்க்கனவுதான்.

குறிப்பாக, ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள், பேரினவாதச் சக்திகளால் தீவிரமாக இலக்கு வைக்கப்பட்டனர். முஸ்லிம் பெண்களின் ஆடைகளில் ஆரம்பித்த கெடுபிடிகள் மற்றும் அடக்கு முறைகள் படிப்படியாக இஸ்லாமியக் கல்வி, இஸ்லாமிய நிறுவனங்கள் என்று வியாபித்து இன்று ஜனாஸா விவகாரத்தில் ஆழமாக நிலைகொண்டுள்ளன. நீண்ட இழுத்தடிப்புக்களுக்குப் பின்னர் இன்று ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதிலும் அரசியல்தான். கிறிஸ்தவர்கள் வாழும் பகுதிகளில் ஜனாஸாக்களை புதைத்து கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஒரு மத சஞ்சலத்தை, அமைதியற்ற போக்கை ஏற்படுத்த இந்த அரசு எத்தனித்தது. பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் சிறுபான்மை மக்களுக்குள்ளேயே மனக் கசப்புக்களை ஏற்படுத்தும் நகர்வு இது. நாளுக்கு நாள் இந்த விவகாரம் பேசுபொருளாகவும் பூதாகரமாகவும் மாறுகின்றது.

அதுபோல், ஈஸ்டர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி தருவேன் என்று ஆட்சிப்பீடம் ஏறிய கோத்தாபய, இன்று அந்த விவகாரத்துக்கு தீர்வை வழங்கத் திராணியற்றவராக மாறியுள்ளார். இதே ஈஸ்டர் குண்டு வெடிப்பு நிகழ்ந்த பின்னர் வந்த பொழுதொன்றில் தான் , " நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார்'' என்று கோத்தாபய அறிவித்திருந்தார். கோத்தாபய போன்ற பலமான, சர்வாதிகாரத்தனம் கொண்ட தலைவர் தேவை என்று, ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் பௌத்த, சிங்கள மக்களிடையே எழுந்த மனோநிலையை மூலதனமாக்கியே கோத்தாபயவால் ஜனாதிபதிப் பதவியை அடையமுடிந்தது. ஆனால் இப்போது அவரையும் மைத்திரிபால போலவே 'பெயிலான' ஜனாதிபதியாக மக்கள் விமர்சிக்கத் தொடங்கிவிட்டனர். இன்னமும் அவரால் ஈஸ்டர் தாக்குதல் குறித்த உண்மைகளை வெளிப்படுத்தவோ, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவோ முடியவில்லை.

இஸ்லாமியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் என்று சகல சிறுபான்மை மதங்களுக்கும் பாரபட்சமின்றி நீதி மறுக்கப்பட்டுள்ளது. மத ரீதியாக மட்டுமன்றி, தமிழ், முஸ்லிம் என்று இன ரீதியாகவும் ஒடுக்குதல் தொடர்கின்றது. இம்முறை மலையக மக்களையும் இந்த அடக்குமுறைப் பட்டியலுக்குள் கொண்டு வந்து, ஆயிரம் ரூபா ஊதியத்தை வைத்து அவர்களின் வாழ்வாதாரத்தோடு அரசாங்கம் விளையாடத் தொடங்கிவிட்டது. ஆக, இப்போது இலங்கையில் அரசுக்கு எதிராக சகல சிறுபான்மை மதத்தவர்களும், சிறுபான்மை இனத்தவர்களும் நீதி மறுக்கப்பட்டு, ஒடுக்கப்படத் தொடங்கியுள்ளனர். தனியே பௌத்த , சிங்கள மக்கள் மட்டுமே இலங்கையில் நிம்மதியாக வாழ முடியும் என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்ட அடக்குமுறைகளையும் வாழ்வுரிமைச் சிக்கல்களையும் கட்டவிழ்த்துவிட்டு, ஒட்டுமொத்த நாட்டையும் கனன்று கொண்டிருக்கும் பூமியாக நாளுக்கு நாள் மாற்றிக்கொண்டிருக்கும் இந்தப் போக்கு 'நவயுக நீரோவுக்கு'நல்லதல்ல. அரசின் அடக்குமுறையின் விளைவாக, முன்னெப்போதும் இல்லாத வகையில் சிறுபான்மையினர் ஓரணியில் திரள ஆரம்பித்துவிட்டனர். இந்த ஒற்றுமை மேலும் வலுப்பெற்று அதற்கு மனிதாபிமானமுள்ள – வாழ்வுரிமையை மதிக்கும் பாங்குள்ள பெரும்பான்மைச் சகோதரர்களின் ஆதரவு கிட்டும் பட்சத்தில் அதுவே பின்னொரு நாளில் நவயுக நீரோவுக்கான முற்றுப்புள்ளியாகவும் மாறக்கூடும்.



# சஹ்ரான் சூத்திரதாரி அல்ல

## பொன்சேகா திட்டவட்டம்

**கொழும்பு, மார்ச் 11**

**எதிர்காலத்தில் அமையவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அனைத்து விடயங்களும் கண்டறியப்பட்டு, கத்தோலிக்க மக்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி விசாரணை அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் அல்ல என்பது அனைவருக்கும் தெரியும். ஆனாலும் அவர்தான் பிரதானி எனக் காண்பிப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். புலிகள் அமைப்புக்குக் கூட தற்கொலைத் தாக்குதல் போராளி ஒருவரை உருவாக்குவதற்கு பல வருடங்கள் எடுத்தன. எனவே, சஹ்ரான் திடீரென உருவான நபர் கிடையாது. 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து அவர் கருத்தியலை விதைத்து வந்துள்ளார். 2014ஆம் ஆண்டு வரை அவருக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் உரிய தகவல் வெளியிடப்பட வேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழு என்பது ஒரு நாடகம். எனவே, நாடகம் முடியும்போது நிச்சயம் உண்மை தெரியவரும்.

அமையவுள்ள எமது ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அனைத்து விடயங்களும் கண்டறியப்படும். பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்படும். அப்போது இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் அனைவராலும் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் - என்றார்.

(ஒ.44)

# மாலதி படையணியின் துப்பாக்கி; பொலிஸாருக்கு பெரும் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணத்தில் மாலதி படையணியின் பயிற்சி முகாமில் இருந்த துப்பாக்கி ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. எனினும் அந்தத் துப்பாக்கியை மீட்ட பொலிஸார் ஏமாற்றமடைந்தனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருந்த காலத்தில் மாலதி படையணியினரின் பயிற்சி முகாம் ஒன்று வரணி, தாவளை இயற்றாளைப் பகுதியில் இயங்கியது. அந்த இடத்தில் துப்பாக்கி ஒன்று காணப்படுகின்றது என்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தேடுதல்களை அடுத்து துப்பாக்கியை மீட்டனர். எனினும் குறித்த துப்பாக்கி போர்ப்பயிற்சிக்கு பயன்படுத்தப்படும் மரத்தினாலான பொம்மைத் துப்பாக்கி என்பது தெரிய வந்துள்ளது. மாலதி படையணியினர் போர்ப் பயிற்சிக்காக குறித்த துப்பாக்கியைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (ப-26)



# வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு மிகுதி கொடுப்பனவு இல்லையேல் போராட்டம்

## செல்வம் எம்.பி அரசுக்கு எச்சரிக்கை

**மன்னார், மார்ச் 11**

**பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு, வடக்கு கிழக்கில் கடந்த அரசால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான மிகுதிக் கொடுப்பனவை இந்த அரசு வழங்கத் தவறினால், அந்த மக்களை இணைத்துப் போராடுவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீடுகள் அற்ற பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களை வீட்டுத்திட்டப் பயனாளிகளாகத் தெரிவு செய்வது வழமை. அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டங்களுக்கு என சுமார் 2 லட்சம் ரூபா மட்டும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு கிழக்கில் வீட்டுத்திட்டப் பயனாளிகள் இன்றுவரை மேலதிக கொடுப்பனவுகள் எவையும் வழங்கப்படாமல் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவர்கள் வீட்டைப் பூர்த்தி செய்ய கடனைப் பெற்றதால் தற்போது கடனாளிகளாகி உள்ளனர். பல்வேறு உடைமைகளை அடகு வைத்து, தற்போது அவற்றை மீட்டுக் கொள்ள முடியாத இக்கட்டான சூழ் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். வீடுகளையும் முழுமையாகக் கட்டி முடிக்க முடியாத நிலையில் உள்ளனர். இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் வாய் திறக்க மாட்டேன் எனச் சொல்லுகின்றார்.

நாங்கள் இந்த அரசிடம் கேள்விகளைக் கேட்டுள்ளோம். அரசு இந்த வீட்டுத்திட்டத்தை முழுமையாக்க, நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்தும், இன்றுவரை குறித்த வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அரசின் கீழ் செயற்படும் ஒரு திணைக்களம். எனவே தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கடந்த அரசில் அமைச்சராக இருந்தபோது இந்த வீட்டுத்திட்டங்களை வழங்கியிருந்தார் என்பதற்காக இந்த அரசு சாமானிய மக்களைப் பழிவாங்கக்கூடாது.

இந்த விடயத்தில் அரசு சரியான ஒரு தீர்வை மாத இறுதிக்குள் வழங்கி மக்களுக்கு கொடுக்க வேண்டிய மிகுதிக் கொடுப்பனவை வழங்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத பட்சத்தில் பாதிக்கப்பட்ட மக்களை இணைத்து வடக்கு கிழக்கில் போராட்டத்தை முன்னெடுக்கின்ற நிலை ஏற்படும். எனவே இந்த மாதத்தினுள், அரசு உரிய பதிலைக் கூறவேண்டும். இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை சந்தித்தும் பேச இருக்கின்றோம் - என்றார். (பு-56)

# முழங்காவில் சந்தைக்கு நிரந்தரக் கட்டடமில்லை

## சபை அமர்வில் தீர்மானம்

முழங்காவில், மார்ச் 11

முழங்காவில், நாகபடுவான் சந்தைப் பகுதியில் நிரந்தர கடைக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதிப்பதில்லை என்று நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பூநகரி பிரதேச சபை அமர்வில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

முழங்காவில் சந்தையில் கடைகளுக்கு கட்டடம் வழங்கப்பட வேண்டும் என பல வியாபாரிகளால் பூநகரி பிரதேச சபையிடம் கடிதம் மூலமாக கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில், இது தொடர்பில் சபை அமர்வில் கவனம்செலுத்தப்பட்டது.

முழங்காவில் சந்தையின் உட்புறத்தில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடைத் தொகுதிகளுக்குப் புறம்பாக, வியாபாரத்துக்கு இடம்வேண்டுமென பதிவு செய்துள்ளோரின் விண்ணப்பங்கள் கருத்தில்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு வியாபாரம் செய்ய நிலத்துண்டுகள் அடையாளப்படுத்தப்படும். அவர்கள் தற்காலிக கொட்டகைகளை அமைத்து வியாபாரங்களை மேற்கொள்ளலாம். எனினும் நிரந்தரக் கட்டடங்களை கட்டுவதற்கு அனுமதி வழங்குவதில்லை என சபை அமர்வில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெகு விரைவில் பல லட்சம் ரூபா செலவில் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியொன்று முழங்காவில் சந்தை வளாகத்தில் அமைக்கப்படவுள்ளது என்றும் பூநகரி பிரதேச சபை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-12)



வவுனியாவில் மகளிர் தினத்தை முன்னிட்டு 'சௌபாக்கியா' திட்டத்தின் கீழ், இரண்டு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட வீடொன்று பொருண்மியம் நலிந்த குடும்பம் ஒன்றுக்கு கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் வவுனியா உதவிப் பிரதேச செயலாளர் சஜீபன் பிரியதர்சினி, சமுர்த்தி திணைக்கள மாவட்ட பணிப்பாளர் திருமதி பத்மரஞ்சன், நகரசபை உறுப்பினர் சுமந்திரன், சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-18)

# வன்னேரிக்குளம் பூங்காவை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட வன்னேரிக்குளம் பறவைகள் சரணாலயத்துடன் கூடிய பொழுது போக்குப் பூங்காவை வினைத்திற னுள்ளதாக மாற்றும் நடவடிக்கைகளை வடக்கு மாகாண சுற்றுலாத் துறை மேற்கொண்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, வடக்கு மாகாண சுற்றுலாத்துறையினருக்கும், வன்னேரிக்குளம் வட்டாரத்தின் சமூக மட்டப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று வன்னேரிக்குளம் பொழுதுபோக்கு பூங்கா வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது பூங்காவின் மின்சார விநியோகத்திலிருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமுகமாக வன்னேரிக்குளத்தை அண்மித்த பகுதியில் மின்மாற்றி ஒன்றை அமைப்பதற்கு வடமாகாண சுற்றுலாத்துறையினரால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுற்றுலாத்துறை உதவிப் பணிப்பாளர் மோகனபாலன், வடக்கு மாகாண சுற்றுலாத்துறையின் மேம்படுத்தல் உத்தியோகத்தர் சிவகுமார், வன்னேரிக்குளம் மற்றும் அக்கராயன்குளம் பகுதிகளின் கிராம அலுவலர்கள், கரைச்சி பிரதேச சபை உதவித் தவிசாளர், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர்கள், சமூகமட்ட பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-12)

### வன்னிவிளாங்குளத்தில்

# பயிர்ச்செய்கைக்கு நீர்ப்பங்கு அளவீடு!

மன்னார், மார்ச் 11

மாந்தை கிழக்கு வன்னிவிளாங்குளத்தின் நீர்ப்பாசனத்தின் கீழ், இந்த வருட காலபோகப் பயிர்ச்செய்கைக்காக தண்ணீர்ப்பங்கு, அளவீடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் நூறு ஏக்கர் பரப்பளவில் இந்தக் குளத்தின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், தற்போதைய சிறுபோகத்துக்கு 45 ஏக்கர் நிலத்திலேயே பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாயத் திணைக்களம் அனுமதியளித்துள்ளது.

இம்முறை சிறுபோகத்தின்போது, சிறுதானியங்கள் பயிரிடுவதை முதன்மைப்படுத்துமாறு விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர் என்று வன்னிவிளாங்குளம் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ற-12)



# யாசகம் பெற்றுவந்த வயோதிபர் முதியோர் இல்லத்தில் சேர்ப்பு

வவுனியா, மார்ச் 11

முல்லைத்தீவு செம்மலைப் பகுதியில் யாசகம் பெற்று வந்த வயோதிபர் ஒருவர் முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

முல்லைத்தீவு செம்மலை கிராமத்தில் பல வருடங்களாக உறவினர்கள் அற்ற நிலையில், நீண்டகாலமாக யாசகம் பெற்று வந்த அருணாச்சலம் பெருமாள் (வயது -78) என்ற முதியவரே வவுனியா சிவன் முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

குமுழமுனை மேற்கு கிராம அலுவலர் அனுஜா, கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இ.கவாஸ்கர் ஆகியோரது முயற்சியில் பிரதேச சமூகசேவை திணைக்களத்தின் அனுமதியுடனும், சிவன் முதியோர் இல்லத்தின் தலைவர் உமா மாதவன், செயலாளர் நவரட்ணராஜா மற்றும் சமூக ஆர்வலர்களான விக்னா, சந்திரகுமார் மற்றும் ஊடகவியலாளர் பாலநாதன் சதீஸ் ஆகியோரின் ஒத்துழைப்புடனும் அவர் முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார். (ந-110)

# ஒன்றுகூடல் நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 11

கரைச்சி பிரதேசசபைக்குட்பட்ட கணேசபுரம் வட்டாரத்தில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய வேலைத்திட்டம் தொடர்பில் கருத்தறியும் ஒன்றுகூடல் நிகழ்வு கணேசபுரம் பொது மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது வருமானம் பெற்றுக்கொள்ளக் கூடிய தொழில் உற்பத்தி சார்ந்த பொதுவேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர், கரைச்சி பிரதேச சபையின் சன சமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கணேசபுரத்திலுள்ள நான்கு கிராமசேவகர் பிரிவுகளுக்குட்பட்ட சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ய-12)

*மன்னார் - கொழும்பு ரயில் சேவை*

# ஆசன முற்பதிவு இல்லை; பயணிப்போருக்கு சிரமம்

**மன்னார், மார்ச் 11**

**மன்னாரில் இருந்து கொழும்புக்கு ரயிலில் பயணிப்போர் ஆசன முற்பதிவுகள் இல்லாமையால் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலர் ஏ.ஸ்ரான்லி டிமெல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்துரையாடியுள்ளார்.**



மன்னாரில் இருந்து கொழும்புக்கான ஆசன முற்பதிவு இணையம் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும் அந்தச் சேவையில் ஏற்பட்ட தடங்கலால் மக்கள் மற்றும் அரச அதிகாரிகள் முற்பதிவு செய்ய முடியாத நிலையில் மன்னாரில் இருந்து கொழும்புக்கு ரயிலில் பயணித்து வந்தனர். முற்பதிவு செய்து பயணிப்பதற்கான ஆசனங்களும் மன்னாரில் இருந்து கொழும்பு வரை பயனிகளின்றி வெறுமையாகவே இருந்துள்ளன. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் மாவட்டச் செயலரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இந் நிலையில் மன்னார் புகையிரத நிலையத்துக்கு நேற்றுச் சென்ற மாவட்டச் செயலர் உரிய அதிகாரிகளுடன் இது தொடர்பில் கலந்துரையாடினார். இடர்கள் நிவர்த்தி செய்யப்பட்டு உடனடியாக மன்னாரில் இருந்து கொழும்புக்கான முற்பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் அவரிடம் உறுதியளித்துள்ளனர். (வ-56)

## தவறான முடிவெடுத்து குடும்பத் தலைவர் உயிரிழப்பு

கைதடி, மார்ச் 11

தவறான முடிவெடுத்து தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பத் தலைவர் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் கைதடி தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான மார்க்கண்டு செந்தில்நாதன் (வயது-41) எனும் தவில் வித்துவானே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக தொழில் பாதிக்கப்பட்ட நிலையில் மன உளைச்சல் காரணமாக அவர் இவ்வாறு தவறான முடிவு எடுத்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை இறப்பு விசாரணைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். (ஜ-9,288)

*சுகாதாரத் தொண்டர்களின்*

## உணவு தவிர்ப்பு போராட்டம் 3 ஆவது நாளாகவும் தொடர்கிறது

யாழ்ப்பாணம், மார்ச் 11

தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களின் உணவு தவிர்ப்பு போராட்டம் மூன்றாவது நாளாகவும் தொடர்கிறது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இவர்கள், தமக்கு உரிய தீர்வு கிடைக்காத நிலையில் நேற்றுமுன்தினம் முதல் தமது போராட்ட வடிவத்தை உணவு தவிர்ப்புப் போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் எடுத்த முயற்சியின் பயனாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர்களாக கடமையாற்றிய சுகாதார பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் முகமாக சுகாதாரப் பணியாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

எனினும் குறித்த நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என பாதிக்கப்பட்ட சுகாதார பணியாளர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக குறித்த நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன.

நிரந்தர நியமனக் கடிதம் பெற்ற சுகாதார பணியாளர்கள் 454 பேர் தமக்கு உரிய தீர்வை வழங்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டம் தொடர்பில் ஆளுநர் உரிய தீர்வை பெற்றுத்தரும் வரை போராட்டம் தொடரும் என்று சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-20,320)

## புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 3,230 கிணறுகள் தேவை

முல்லைத்தீவு, மார்ச் 11

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 19 கிராம அலுவலர் பிரிவுகளின் கீழ் உள்ள குடும்பங்களில் 3 ஆயிரத்து 230 குடும்பங்கள் கிணறுகள் இன்றி உள்ளன என புதுக்குடி யிருப்பு பிரதேச புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

14 ஆயிரத்து 52 குடும்பங்களைக் கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மக்கள் குடிதண்ணீர் வசதி இன்றி சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மக்களின் கோரிக்கைக்கு அமைவாக இந்தப் பிரதேசத்தில் 3 ஆயிரத்து 230 கிணறுகளின் தேவைப்பாடு உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-19)



## பெண்களுக்கெதிரான வன்முறை: யாழில் சுவரோவிய விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் வகையில் விழிப்புணர்வு சுவரோவியங்கள் வரையும் செயற்திட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் திட்ட முகாமையாளர் எஸ். ஜெயதிலீபனின் வழிகாட்டுதலில் யாழ்ப்பாணம் பிரதான வீதி, டேவிட் வீதியில் இடம்பெற்றது.

நிகழ்வில் மதகுருக்கள், சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் பணிப்பாளர் ரி.சுபாஜினி, மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-20)

## இலங்கை விமானப்படைக்கு புதிய பிரதானி நியமனம்

கொழும்பு, மார்ச் 11

இலங்கை விமானப்படையின் புதிய பிரதானியாக எயர் வைஸ் மார்ஷல் பிரசன்னா பயோவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நியமித்துள்ளார்.

விமானப்படைத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில், விமானப்படை தளபதி எயர் மார்ஷல் சுதர்ஷன பத்திரானவிடம் இருந்து எயர் வைஸ் மார்ஷல் பிரசன்னா பயோ தமது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார். (ஐ-இ)

## தனிமைப்படுத்தல் மீறல்; கண்காணிப்பு தொடரும்

*பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 11

தனிமைப்படுத்தல் விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய நேற்றுமுன்தினம் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 337 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எனவே முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணுதல் என்பவை தொடர்ந்தும் பின்பற்றப்பட வேண்டும். இவை தொடர்பில் இலங்கை பொலிஸ் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும். இதேபோன்று தனிமைப்படுத்தல் விதிமுறைகளுக்கு முரணாக ஏற்பாடு செய்யப்படும் ஒன்றுகூடல்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பிலும் தொடர்ந்தும் அவதானம் செலுத்தப்படும் - என்றார். (ப)

## வினாத்தாள்கள் திருத்தும் பணி 27ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 11

2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் வினாத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட உள்ளன என்று கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நேற்று நிறைவடைந்த நிலையில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். (ப)

## போதை அடிமைகளால் கொள்ளை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 11

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் நகைக் கொள்ளைகளில் ஈடுபட்டுவரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 3 பகுதிகளில் இவ்வாறு தங்கச் சங்கிலிகள் கொள்ளையிடப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவ்வாறான சந்தேகநபர்கள் கடைகளுக்கு அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்துவதைப் போன்றும், யாருக்காகவோ காத்திருப்பதைப் போன்றும் பாவனை செய்தவாறு காத்திருப்பது மற்றும் பஸ் தரிப்பிடங்களில் தங்களை பொலிஸார் என அடையாளப்படுத்தியும் கொள்ளையில் ஈடுபடுகின்றனர். எனவே தனியாக வீதிகளில் செல்லும் பெண்களும், சன நடமாட்டம் குறைவான பிரதேசத்தில் செல்லும் பெண்களும் இவ்விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# ஐ.நா. வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்காது

## ஆங்கில ஊடகம் தகவல்

**கொழும்பு, மார்ச் 11**

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில், இந்தியா பங்கேற்காது என்ற தகவல் வெளியாகியுள்ளது.**

உயர்மட்ட அதிகாரிகளை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகம் ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படவுள்ள திருத்தங்கள் அடங்கிய பிரேரணை சில ஊடகங்களால் பகிரங்கப்படுத்தப்பட்டன.

மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் தண்டித்தல் உள்ளிட்ட பரிந்துரைகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கு அயல் நாடான இந்தியாவின் ஆதரவும் எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் வாக்கெடுப்பில் கலந்துகொள்வதை இந்தியா தவிர்க்கும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தீர்மானத்தைத் தோற்கடிக்க 47 உறுப்பு நாடுகளில் 24 நாடுகளின் ஆதரவு இலங்கைக்குத் தேவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான அமைப்பு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பொதுபலசேனா இன்று போராட்டம்

"ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கும், பொதுபல சேனா அமைப்பை தடை செய்ய வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து இன்று வியாழக்கிழமை சுதந்திர சதுக்கத்தில் பௌத்த துறவிகளை ஒன்றிணைத்து சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் அஸ்கிரிய பீடத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பௌத்த நாட்டில் பௌத்த அமைப்புக்கள் அடிப்படைவாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன என்ற தவறான நிலைப்பாட்டை ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை தோற்றுவித்துள்ளது. இது தவறான செயற்பாடு. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம் - என்றார். (ஐ-இ)

# சிவராத்திரியை முன்னிட்டு கலைக் களஞ்சியம் வெளியீடு

## ஆலயங்களுக்கும் நிதியுதவி



கொழும்பு,மார்ச் 11

மகா சிவராத்திரியை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் மீள்பதிப்புச் செய்யப்பட்ட, 'இந்து கலைக் களஞ்சியம்' நூல் வெளியிடப்பட்டதுடன், தெரிவுசெய்யப்பட்ட ஆலயங்களுக்கு நிதியுதவியும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுகள் அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ச நூலை வெளியிட்டார்.

இந்து கலைக் களஞ்சியத்தின் ஆரம்பப் பிரதிகள் பிரதமரால் இந்து மதகுருமார்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

நிகழ்வில் இந்து ஆலயங்களில், மகா சிவராத்திரி நிகழ்வை சிறப்புற நிகழ்த்த, பகுதியளவிலான அனுசரணையாக 50 ஆலயங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வழங்கும் செயற்றிட்டத்தில், தெரிவுசெய்யப்பட்ட ஆலயங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது என்று பிரதமரின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மீளப்பெறப்பட்டது ஹிருணிகவின் பிடியாணை

கொழும்பு,மார்ச் 11

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிக பிரேமச்சந்திரவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை மீளப் பெறப்பட்டுள்ளது.

கொழும்பு - தெமட்டகொடை பிரதேசத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு இளைஞர் ஒருவர் டிபெண்டர் வாகனத்தில் கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, ஹிருணிகா பிரேமச்சந்திர நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தை அடுத்து அவரைக் கைதுசெய்யுமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. எனினும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு சில நிமிடங்களின் பின்னர் ஹிருணிக தனது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் முன்னிலையானதையடுத்து பிடியாணை மீளப்பெறப்பட்டது. (ஐ-இ)

# சுகாதார நடைமுறைகளுடன் சிவராத்திரியை கடைப்பிடிக்குக

## இந்துமா மன்றம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 11

கொரோனா எனும் தொற்றுநோயின் தாக்கத்தால் முன்புபோல இந்த ஆண்டு ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்வதில் சில வசதியீனங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் மக்கள் மிகவும் சுகாதார பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து சிவராத்திரி விரதத்தைப் பக்திபூர்வமாக கடைப்பிடிக்க வேண்டும் என்று அகில இலங்கை இந்துமா மன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அந்த மன்றம் வெளியிட்டுள்ள ஆசிச் செய்தியில் மேலும் உள்ளதாவது;


சிவ வழிபாடுகளில் ஈடுபட்டு மன அடக்கத்தையும், ஆன்மீக பலத்தையும் அதிகரிக்கச் செய்து எல்லாம் வல்ல பரம்பொருளின் அருளைப் பெற்று ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கான உத்தமமான ஒரு விரத நாளே இந்த மகா சிவராத்திரி விரத நாளாகும்.

கடந்த பல மாதங்களாக உலகை நிலைதடுமாறச் செய்துள்ள கொரோனா எனும் தொற்றுநோயின் தாக்கத்தால் முன்புபோல இந்த ஆண்டு ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்வதில் சில வசதியீனங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் மக்கள் மிகவும் சுகாதார பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து சிவராத்திரி விரதத்தைப் பக்திபூர்வமாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அரசு விடுத்துள்ள சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளை மனதிற்கொண்டு கொரோனாவின் பிடியில் அகப்பட்டுவிடாமல் உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ப)

# புதிய கட்சிகளுக்கு விரைவில் பதிவு

நாட்டில் புதிய கட்சிகளைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்தவர்களின், அடிப்படைத் தகைமைகளை ஆராய்ந்த தன் பின்னர், நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு விடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் சிரேஷ்ட சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

38 அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் தற்போதுவரை கிடைத்துள்ளன. கடந்த வருடம் பதிவு செய்வதற்காக 158 கட்சிகளின் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)



# 107 கிலோ கஞ்சா வள்ளத்தில் மீட்பு

புத்தளம்,மார்ச் 11

கற்பிட்டி, சோமாதீவு பகுதியில், கைவிடப்பட்ட வள்ளம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த, 107 கிலோ கிராம் கஞ்சாப் பொதிகள், கடற்படையினரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டன. கடத்தலுடன் தொடர்புடையவர்கள், கஞ்சாவைக் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகள், சம்பந்தப்பட்ட சட்ட அமுலாக்கல் பிரிவினரிடம் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்தனர். (க-இ)

# இன நல்லிணக்கத்துக்காக இந்நாளில் பிரார்த்திப்போம்

## மகா சிவராத்திரிக்கான ஆசிச் செய்தியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

நாட்டில் இன நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வினூடாக ஐக்கியம் பலம் பெற இறையருள் துணை புரியட்டும். மகா சிவராத்திரி எனும் புனிதமான இந்த விரத நாளில் அதற்கான இறையருள் வேண்டி அனைவரும் பிரார்த்திப்போம். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார்.

மகா சிவராத்திரியை முன்னிட்டு அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையில் வாழ்கின்ற ஏனைய சமூகங்களோடு ஐக்கியத்துடனும், நட்புறவுடனும் வாழும் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட இந்துக்கள், இந்தப் புனித மான விரதத்தை ஆன்மிக உணர்வுடன் அனுஷ்டித்து வருகின்றனர்.

தியானமே மனிதனை ஆன்மிக ரீதியில் பக்குவப்படுத்தவல்லது. இருள் நீங்கி அறிவுஞானம் தளைத்தோங்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு, இந்து இறை அடியார்கள் அனைவரும் இரவு முழுவதும் கண்விழித்து விரதமிருந்து புண்ணிய கருமங்களில் ஈடுபட்டு இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பர்.

இதனால் வளமானதொரு எதிர்காலம் இலங்கை வாழ் இந்துக்களுக்கு கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன் - என்றுள்ளது. (க)

ஏப்.21 தாக்குதல்

# விசாரணை அறிக்கையில் இரு வகை பரிந்துரைகள்

## உதய கம்மன்பில விளக்கம்



கொழும்பு,மார்ச் 11

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் சட்ட ரீதியான பரிந்துரைகள் மற்றும் அரசியல் சமூக பரிந்துரைகள் என இரு வகைப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சட்ட ரீதியான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருப்பின் அவை சட்டமா அதிபரின் பொறுப்பின் கீழ் உள்ளடக்கப்படும். எனவே சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதா இல்லையா என்பதை சட்டமா அதிபர் மாத்திரமே தீர்மானிப்பார். இதில் எவரது தலையீடும் இருக்காது.

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை வரலாற்றில் எந்தவொரு ஜனாதிபதி ஆணைக்குழுவாலும் வழங்கப்பட்ட சகல பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. வெவ்வேறு நிறுவனங்களை அமைத்தல், தற்போது காணப்படும் சட்டங்களை மறுசீரமைத்தல், கொள்கை ரீதியான விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியுமா, என்பதற்கான அறிக்கையை சமர்ப்பிப்பதற்காகவே அமைச்சர் சமல் ராஜபக்ச தலைமையில் அறுவரடங்கிய அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கை வெகு விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றார். இது தொடர்பில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்ததாவது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றதும், அதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டது கடந்த அரசிலாகும். இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் தற்போதைய அரசின் தலையீடுகள் எவையும் இல்லை. சுயாதீனமாக முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டு மிகக் குறுகிய காலத்துக்குள் நாடாளுமன்றிலும், சட்டமா அதிபரிடமும், ஏனைய மதத் தலைவர்களிடமும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நாம் துரிதமான செயற்பாடுகளை முன்னெடுப்போம் - என்றார். (சு-இ)

# ஹெரோய்னுடன் இளைஞர் கைது

வவுனியா,மார்ச் 11

ஹெரோய்ன் போதைப்பொருளை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

செட்டிகுளம் ஆண்டியாபுளியங்குளம் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இவர் கைதுசெய்யப்பட்டார்.

செட்டிகுளம் ஆண்டியாபுளியங்குளம் விஷேட அதிரடிப் படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து குறித்த பகுதியில் தனிமையில் நின்ற இளைஞரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 800 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-110)

# கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கையில் டிரைமாஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடமாகாணத்தில் கொரோனா தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கையில் 'டிரைமாஸ்' (TRYMAS) என்னும் நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

வடமாகாணத்தில் உள்ள நகரப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு இவர்கள் சென்று முகக்கவசம், கைகழுவும் திரவம் மற்றும் விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களை வழங்கும் நடவடிக்கையை கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து இதுவரை குருநகர், கல்வியங்காடு, அச்சுவேலி, கோப்பாய், தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், சங்கானை மற்றும் வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இச் செயற்பாட்டை இவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

இன்று தொடக்கம் 23ஆம் திகதி வரை முறையே திருநெல்வேலியிலும், தொடர்ந்து ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், மருதனார்மடம், கொடிகாமம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கொக்குவில், சுன்னாகம், மல்லாகம் ஆகிய இடங்களிலும் இந்த செயற்பாட்டை இவர்கள் முன்னெடுக்கவுள்ளனர். தொடர்ந்து 24ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி வரை முறையே பளை, பூநகரி, கிளிநொச்சி நகரம், விஸ்வமடு, கிளிநொச்சி டிப்போ சந்தி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, முள்ளியவளை, மாங்குளம், மல்லாவி, புளியங்குளம், வவுனியா புதிய பேருந்து நிலையம், குருமன்காடு, வவுனியா நகரம், பேசாலை, மன்னார், செட்டிகுளம் ஆகிய இடங்களில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர். (வ-9)

மன்னாரில் இதுவரை

# 11 ஆயிரத்து 230 பி.சி.ஆரில் 305 பேருக்கு தொற்று உறுதி

## மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

மன்னார், மார்ச் 11

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 11 ஆயிரத்து 230 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் 305 கொரோனாத் தொற்றாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் 17 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 8 பேர் மன்னார் மீன் சந்தைப் பகுதியில் மீன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருபவர்களாவர். மேலும் 5 பேர் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்ட நுன்கடன் நிறுவன பணியாளரின் குடும்ப உறுப்பினர்கள். மேலும் இருவர் மாந்தை மேற்குப் பகுதியில் தொற்றுடன் இனங்காணப்பட்டவர்களின் முதல் நிலை தொடர்பாளர்களாகவும், ஒருவர் ஏற்கனவே இனங்காணப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் கடமையாற்றியவரோடு நெருங்கிப் பழகியவராகவும், மேலும் ஒருவர் கர்ப்பிணிப் பெண்ணொருவராகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும் முசலிப் பகுதியில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட 83 பீ.சி.ஆர்.பரிசோதனைகளின் போது எவருக்கும் தொற்று இல்லை என தெரியவந்துள்ளது.


மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 305 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் 288 நபர்கள் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதத்தில் 38 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 11 ஆயிரத்து 230 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மாதம் 683 பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் க.பொ.த சாதாரண தர பரீட்சைகள் சுமூகமான முறையில் இடம்பெற்றுள்ளன.

முதல் நிலை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்த மூன்று மாணவர்கள் சுகாதாரப் பிரிவின் போக்குவரத்து வசதி ஊடாக பரீட்சையில் தோற்றிப் பரீட்சையை நிறைவு செய்துள்ளனர். மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் மகா சிவராத்திரி நிகழ்வு மட்டுப்படுத்தப்பட்ட அளவு பக்தர்களுடன் கடுமையான சுகாதார நடைமுறைகளுடன் இன்று இடம்பெற உள்ளது. கண்காணிப்பு நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர் - என்றார். (வ-56,213)

# குருதிக்கொடை முகாம்

17வது மாபெரும் குருதிக்கொடை முகாம் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இளவாலை புனித யூதாதேயு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு அனைத்து குருதிக்கொடையாளர்களும் தவறாது வருகைதந்து குருதி வழங்குமாறு வாலிப சங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ய-222)



யூப்ரேசியா இளைஞர் கழக உறுப்பினர்களுக்கான மகிழ்ச்சிக்கான வழி தேடி தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை நடைபெற்று, நிறைவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஒன்று கூடுவோம் இலங்கை அமைப்பின் வட மாகாண முகாமையாளர் அனிநிலவன் மற்றும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் சு.நக்கீரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (ய-159)

# கல்வி அலகு திறப்பு விழா

சுன்னாகம், மார்ச் 11

மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் விசேட கல்வி அலகு திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை வளாகத்தில் அதிபர் ஏ.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ய-39)

# ஆண்கள் வீதிகளில் வரமுடியாத அளவுக்கு பெண்கள் இன்று ஆடை அணிகின்றனர்

## ரிஷாத் எம்.பி. சாடல்



**கொழும்பு,மார்ச் 11**

**இன்று சில பெண்கள் அணிகின்ற ஆடைகள், ஆண்கள் கூட வீதிகளில் தலைநிமிர்ந்து நடக்க முடியாத நிலையை ஏற்படுத்துகின்றன. இவர்கள் உண்மையில் ஆடை அணிந்திருக்கின்றார்கள்தானா? என்றும் எண்ணத் தோன்றுகின்றது. இவ்வாறு பெண்கள் நடந்து கொள்வது குறித்து எவரும் கண்டுகொள்வதில்லை.**

ஆனால், இதற்கு மறுவளமாக, இஸ்லாமியர்களை பழிவாங்குவதற்காக பொய்ப் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். இவ்வாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மார்க்கத்தைச் சரிவரத் தெரிந்து கொள்ளாதவர்களும், இஸ்லாமியர் மீது வெறுப்புணர்வு கொண்டவர்களுமே, தேவையற்ற விடயங்களைப் பேசித் திரிகின்றனர். முஸ்லிம்கள் அரசுக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக, பழிவாங்கும் நோக்குடன் பொய்ப் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். தற்போது, பெண்களின் உடை பற்றி பேசப்படுகின்றது. குறிப்பாக, முகத்தை மூடக்கூடாது. அது நாட்டுக்கு ஆபத்து எனவும் பல வந்தப்படுத்த எண்ணுகின்றனர். பெண்களைப் பொறுத்தவரையில், அவர்களின் ஆடையை அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். இன்று சில பெண்கள் அணிகின்ற ஆடைகள், ஆண்கள் கூட பாதைகளில் நடக்க முடியாத நிலையை ஏற்படுத்துகின்றன. இவர்கள் ஆடை அணிந்திருக்கின்றார்களா? என்றும் எண்ணத் தோன்றுகின்றது. இவ்வாறு பெண்கள் நடந்து கொள்வது குறித்து எவரும் கண்டு கொள்வதில்லை. ஆனால், இதற்கு மறுவளமாக, இஸ்லாமியர்களை பழிவாங்குவதற்காக பொய் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். அதுமாத்திரமின்றி, சில எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். அதேபோன்று, திருமணச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டுமெனக் கூறப்படுகின்றது. இஸ்லாமிய அறிஞர்கள் புத்திஜீவிகள் ஆகியோருடன் கலந்துரையாடி இவற்றை மேற்கொள்ள வேண்டுமே தவிர, இரவோடு இரவாக வர்த்தகமானியூடாக இதனைச் செய்து விட முடியாது. -என்றார். (க-இ)

# வாகனங்களின் விலை விரைவில் குறையும்?

கொழும்பு,மார்ச் 11

தற்போது நியாயமற்ற முறையில் உயர்த்தப்பட்டுள்ள வாகனங்களின் விலை ஓரளவு குறைவடைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சம்பத் மெரின்னகே தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் மற்றும் மத்திய வங்கி ஆகியவை வாகனங்களை இறக்குமதி செய்வதற்குத் விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்குவதற்கான ஒழுங்கு முறை தொடர்பில் கலந்துரையாடி வருகின்றன.

ஜனாதிபதி செயலாளரின் தலையீட்டுடன் அடுத்த வாரம் நடைபெறவுள்ள பேச்சுக்களில் சாதகமான தீர்வு எட்டப்படலாம். அதனடிப்படையில் வாகனங்கள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை விரைவில் நீக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (க-இ)

# நுண்கடனில் சிக்கிய 24,38,000 பெண்கள்

## 200 பேர் உயிர்மாய்ப்பு

கொழும்பு,மார்ச் 11

நிதி நிறுவனங்களின் நுண்கடன்களால் நாட்டில் 24 லட்சத்து 38 ஆயிரம் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 200 பெண்கள் கடனைச் செலுத்த முடியாமல் உயிரை மாய்த்துள்ளனர்.

இந்தத் தகவலை தேசிய மக்கள் சக்தியின் (மக்கள் விடுதலை முன்னணி) நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் 2.8 மில்லியன் பேர் நுண்கடன்களால் பாதிகப்பட்டுள்ளனர். அவர்களில் பெண்களும் அதிகம். பொருளாதார முறையால் பெண் தொழில் முயற்சியாளர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். நிதி நிறுவனங்களால் பெண்கள் சூறையாடப்பட்டு வருகின்றனர். நிதி நிறுவனங்கள் மிகவும் மோசமான முறையில் பெண்களை இலக்குவைத்து, கடன் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றன.

அதனால் நுண்கடன் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள், அவற்றின் சட்ட முறைகள் தொடர்பாக கணக்காய்வொன்றை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக நாடாளுமன்ற செயற்குழுவில் ஆராய்ந்து முறையான செயற்றிட்டங்களை ஏற்படுத்த வேண்டும். என்றார். (க-இ)

# விபத்தைத் தடுக்க டிஜிற்றல் பிரிவு

வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு, டிஜிற்றல் முறையின் கீழ் விசேட பிரிவை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. வாகனங்களில் பயணிப்போர் மட்டுமல்லாது, பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்து, வீதி விபத்துக்களைத் தடுப்பதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. விரைவில் அந்த பிரிவு அமைக்கப்படும் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். (க-இ)

# அரசின் இரட்டை வேடத்தை பகிரங்கப்படுத்தியது இந்தியா

## வெளிப்படுத்தினார் ஹர்ஷன எம்.பி.

கொழும்பு,மார்ச் 11

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு மற்றும் மேற்கு முனைய விவகாரத்தில், இலங்கை அரசின் இரட்டை வேடத்தை இந்தியா பகிரங்கப்படுத்தியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை விவகாரத்தை அரசு குறுகிய அரசியல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்கிறது. இராணுவத்தினரை மின்சாரக் கதிரைக்குக் கொண்டு செல்லும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் விவகாரம் காணப்படுகிறது என்று ஆளும் தரப்பினர் குறிப்பிட்டனர். இவர்களின் தவறான தேர்தல் பரப்புரைகளால் இலங்கை சர்வதேச மட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டது.

நல்லாட்சி அரசு இராணுவத்தினரை சர்வதேசத்தில் காட்டிக் கொடுத்ததாகக் குறிப்பிடப்படும் செய்தி முற்றிலும் தவறானதாகும். நாட்டின் இறையாண்மையையும், சுயாதீனத்தன்மையும் அரசு ஒருபோதும் விட்டுக் கொடுக்கவில்லை. தற்போதைய அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையை அணுகும் விதம் முற்றிலும் தவறானது.

வெறுக்கத்தக்க பேச்சுக்களால் தேசிய நல்லிணக்கம் பாதிக்கப்பட்டுள்ளது. உள்ளக மட்டத்தில் காணப்படும் தவறுகளைத் திருத்திக் கொள்ளாமல் சர்வதேச அரங்கில் வீரவசனம் பேசுவது பயனற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் சீனாவுக்கு வரையறையற்ற முன்னுரிமை வழங்கப்பட்டது. இதன் காரணமாக அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அழுத்தங்கள் இலங்கை மீது செலுத்தப்பட்டன. தற்போதும் இந்த நிலைமையே காணப்படுகிறது.

எனவே இராஜதந்திர மட்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு காண எதிர்க்கட்சியினர் என்ற ரீதியில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்றார். (க-இ)

# உலகில் பெண்கள் மீதான வன்முறை அதிகரிப்பு

## தினமும் 3 பெண்களில் ஒருவர் மீது வன்முறை

கொழும்பு,மார்ச் 11

உலகில் கொவிட் 19 தொற்று நோய் பரவலுக்கு மத்தியிலும் தினமும் மூன்று பெண்களில் ஒருவர் தங்கள் வாழ்நாளில் பாலியல் அல்லது உடல் ரீதியான வன்முறைகளால் பாதிக்கப்படுகின்றனர் என்று உலக சுகாதார அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் புதிய அறிக்கையின்படி, மில்லியன் கணக்கான பெண்கள் வன்முறைகளால் பாதிக்கப்படுகின்றனர்.

கிரிபாஸ், பிஜி, பப்புவா நியூ கினியா, பங்களாதேஷ், கொங்கோ ஜனநாயக குடியரசு மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் வன்முறையை அதிகம் எதிர்கொள்கின்றன. இவற்றுள் மிகக் குறைந்த விகிதங்கள் ஐரோப்பாவில் பதிவாகியுள்ளன. வன்முறையைத் தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகளை மேம்படுத்தவும் சர்வதேச அரசை வலியுறுத்தி இந்த ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளது. 15 தொடக்கம் 49 வயதுடைய பெண்களில் சுமார் 31 சதவீதம் பேர், அல்லது 852 மில்லியன் பெண்கள் வரை உடல் அல்லது பாலியல் வன்முறைகளை அனுபவித்துள்ளனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

# சில பாடசாலைகள் மூடப்படும் சாத்தியம்

கொழும்பு,மார்ச் 11

நாடளாவிய ரீதியில், பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சில பாடசாலைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் இவ்வாறு மூடப்படும் நிலையில் உள்ளன என்று தேசிய காணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை, மாணவர்களின் செயற்றிறன் மற்றும் பௌதிக வளங்களின் குறைபாடுகள் காரணமாக இவ்வாறான பாடசாலைகளை மூட வேண்டியுள்ளது.

குறைபாடுகளுடைய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு, அவர்கள் விரும்பும் இரண்டாம் நிலை பாடங்களைத் தெரிவுசெய்ய வாய்ப்புக் கிடைப்பதில்லை. எனவே இந்த பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வைக் காண வேண்டியது அவசியம் என்றும் அலுவலகம் வலியுறுத்தியுள்ளது. (க-இ)

# ஐந்து சந்தியில் நேற்று குழப்பம்; மாநகர உறுப்பினர் மீது தாக்கு

மூவர் கைது

**யாழ்ப்பாணம், மார்ச் 11**

**யாழ்ப்பாணம் ஐந்து சந்தி, புதிய சோனகத்தெரு பகுதியில் ஏற்பட்ட குழப்ப நிலையைத் தொடர்ந்து அந்தப் பகுதியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் நியாஸ் தாக்குதலுக்கு உள்ளான நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். உறுப்பினரைத் தாக்கினர் என்று மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

இந்தச் சம்வம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. ஐந்து சந்திப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கேற் தூண் சட்டவிரோதமான விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மாநகர சபையின் அனுமதி பெறப்படவில்லை என்று தெரிவித்து யாழ் மாநகர சபையின் குறித்த வட்டார உறுப்பினரால் குறித்த தூண் இடித்தகற்றப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த தூணை நிறுவிய தரப்பைச் சேர்ந்த சிலர் குழப்பத்தில் ஈடுபட்டனர். இதன்போதே வட்டார உறுப்பினர் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற யாழ்ப்பாண மாநகர சபை அமர்வில் சபையின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இது தொடர்பான கண்டனத் தீர்மானம் ஒன்றும் சபையில் நிறைவேற்றப்பட்டது. அத்தோடு சபை அமர்வு அரை மணித்தியாலம் ஒத்திவைக்கப்பட்டது. இதன்போது மாநகர சபை உறுப்பினர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று நிலமைகளை ஆராய்ந்தனர். எனினும் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மாநகர சபை முதல்வர் மற்றும் உறுப்பினர்களுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டனர். சம்பவம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு, சம்பந்தப்பட்ட மக்களை, மாநகர சபைக்கு வருமாறு முதல்வர் அழைத்தார். இடித்தழிக்கப்பட்ட தூண் அந்த இடத்திலேயே மீள அமைக்கப்பட வேண்டும் என்றும், மாநகர சபை அதை அமைத்துத் தரவேண்டும் என்றும் அவர்கள் கோரினர். முதல்வரின் உறுதிமொழியை அடுத்து நிலைமை சுமூகமடைந்தது. (ப-319,320)



## நீதி வேண்டுமென வலியுறுத்தி தவிசாளருக்கு எதிராக பேரணி!

மட்டக்களப்பு, மார்ச் 11

2021 ஆம் ஆண்டுப் பாதீட்டை நிறைவேற்றாத கோறளைப்பற்று பிரதேசசபைத் தவிசாளரை தொடர்ந்தும் நிர்வாகம் செய்ய அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தி கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் கோறளைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர்களுக்கு எதிராக எதிர்த்தரப்பு உறுப்பினர்களால் கண்டனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கோறளைப்பற்றுப் பிரதேச சபையின் 37 ஆவது சபை அமர்வு நேற்றுமுன்தினம் தவிசாளர் சோபா ஜெயரஞ்சித் தலைமையில் நடைபெற்றது.

இந்தச் சபை அமர்வு முடிவடைந்த பின்னர், எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் வாசகங்கள் எழுதிய பதாகைகளை கையில் ஏந்தி, நீதி வேண்டும் எனக் கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக நடந்து சென்று பிரதான வீதி வழியாகச் சென்றனர்.

இதன்போது, கிழக்கின் ஆளுநரே, 2021 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை நிறைவேற்றாத தவிசாளரை நிர்வாகம் செய்ய அனுமதிக்க வேண்டாம். ஊழல் நிறைந்த தவிசாளர் மீது முறையான விசாரணை நடத்துங்கள், சபையில் நடந்த நிதி மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகத்துக்கு உடனடியாக விசாரணை செய்து தீர்வு தாருங்கள். முறையாக ஜனநாயக வழியில் தவிசாளரை தெரிவுசெய்ய ஆவன செய்யுங்கள். பெரும்பான்மை மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை புறக்கணிக்க வேண்டாம். கோறளைப்பற்று பிரதேச சபைக்கு மாத்திரம் தனியான உள்ளூராட்சி சட்டமா? போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு பேரணியாக வலம் வந்தனர்.

(ற-150)



## கனகர் கிராம மக்களை உடன் மீளக்குடியமர்த்துக

ஜனநாயக இளைஞர் அமைப்பு கோரிக்கை

கடந்த 925 நாள்களாக சுழற்சிமுறையில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அம்பாறை பொத்துவில் கனகர் கிராம மக்களை, விரைவில் மீளக் குடியமர்த்த தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனநாயக இளைஞர் அமைப்பின் பொதுச் செயலாளர் கோபாலபிள்ளை மிதுஜன் தெரிவித்துள்ளார்.

மேலும், 1981 ஆம் ஆண்டு அப்போதைய பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான எம்.சி.கனகரெட்னத்தின் முயற்சியால் 30 வீடுகள் கட்டப்பட்டு (60 ஆம் கட்டை) கனகர் கிராமம் என அது வர்த்தமானி அறிவிப்பின் பிரகாரம் மக்கள் குடியமர்த்தப்பட்டனர். இருப்பினும் 1990களில் ஏற்பட்ட யுத்த சூழலால் அம் மக்கள் இடம்பெயர்ந்து திருக்கோவில் பிரதேசத்தில் வசித்து தற்காலிகமாக வந்தனர். ஆனால் யுத்தம் முடிவுற்று பன்னிரண்டு வருடங்கள் முடிவடைந்தும் இதுவரை அவர்கள் மீள் குடியேற்றப்படவில்லை.

இந்நிலையிலேயே தங்களை மீள்குடியேற்றமாறு கடந்த 925 நாள்களாக இக் கிராம மக்கள் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவர்களை தமது சொந்தக் காணிகளில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார் (ரு-13)

## போலி நாணயத்தாள் அச்சிடுதல் தாராளம்

மக்களுக்கு எச்சரிக்கை

போலி நாணயத்தாள்களை உபயோகித்தல் மற்றும் அச்சிடுதல் உள்ளிட்ட குற்றச் செயல்கள் பல அதிகம் பல பதிவாகியுள்ளன. 5 ஆயிரம் ரூபா மற்றும் ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் சட்டபூர்வமற்ற விதத்தில் அதிக அளவில் அச்சிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

எனவே நேரடி பண பறிமாற்றத்தின் போது மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

உண்மையான நாணயத்தாள் எனக் கண்டறிவதற்கான அனைத்து அடையாளங்களையும் பரிசோதித்து பிறிதொருவரிமிருந்து அவற்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக விற்பனை நிலையங்கள் மற்றும் சந்தை உரிமையாளர்கள் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை அத்தியாவசியப் பொருள் விற்பனை நிலையமொன்றில் பொருள்களைக் கொள்வனவு செய்து, 5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளை வழங்கிய, இரண்டு சந்தேக நபர்கள் களனி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (க-இ)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகி அம்மன் ஆலயம் ஆகியவற்றின் வருடாந்த உற்சவங்களின்போது இடம்பெறும் குருதிக்கொடை நிகழ்வு இம்முறையும் இடம்பெற்றுள்ளது. (ப)



சர்வதேச மகளிர் தினத்தன்று கடந்த திங்கட்கிழமை பலாலி வீதியில் அமைந்துள்ள அழகு சாதன நிலையத்தில் யாழ். மாவட்ட அழகுக்கலை நிபுணர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நடைபெற்றது. (ய -9)

## அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் எம்.பிக்கள் கலந்துகொள்வதில்லை

மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வதில்லை என்று மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சீ. வி. விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் மற்றும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோரே இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை.

மக்களின் அபிவிருத்திகளை இலக்காகக் கொண்டு நாடாளுமன்றம் சென்ற இவர்கள் இவ்வாறான அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு மக்களின் குறைகளைக் கேட்டறிய வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர்.

குறிப்பாக இவர்கள் சார்பாக பிரதிநிதிகளை அனுப்புவதை விடுத்து சில தீர்மானங்கள் எடுக்கின்ற போது, அவர்கள் முன்னின்று தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

தனியே தேர்தலில் போட்டியிடுவது மட்டுமல்லாது மக்களின் பிரச்சினைகளை கதைக்கின்ற இடங்களுக்கும் அவர்கள் வருகை தரவேண்டும் எனவும் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபரிடம் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா எனக் கேட்டபோது நாங்கள் எவரையும் அழைக்காது விடவில்லை. அனைவருக்கும் அழைப்பு விடுத்து வந்துள்ளோம் என்று தெரிவித்தார். (ற-6)

# கரைச்சி பிரதேசசபை உறுப்பினரை ரி.ஐ.டி. விசாரணைக்கு அழைப்பு

## வாயில் கறுப்புத் துணி கட்டி உறுப்பினர்கள் கவனவீர்ப்பு



**கிளிநொச்சி, மார்ச் 11**

**கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் நாகேந்திரம் செல்வநாயகத்தை, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைக்கு முன்னிலையாகுமாறு அழைத்தமையைக் கண்டித்து பிரதேச சபை அமர்வின்போது உறுப்பினர்கள் வாயில் கறுப்புத் துணி கட்டி அமைதி வழிப் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.**

'பொ-பொ' பேரணியில் கலந்து கொண்டார் என்று தெரிவித்து வாக்குமூலம் பெறுவதற்காக கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினரான நாகேந்திரம் செல்வநாயகம் கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவுக்கு நேற்று விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார். கரைச்சி பிரதேச சபை அமர்வு நேற்றுக் காலை இடம்பெற்றபோது இந்த விடயம் தொடர்பில் உறுப்பினர்கள் சபைக்கு அறிவித்தனர். இதன்போது சபையின் உறுப்பினர் இவ்வாறு விசாரணைக்காக அழைக்கப்பட்டமையை சபை கண்டித்தது.

தொடர்ந்து சபை 5 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டது. இதன்போது உறுப்பினர்கள் தங்களுடைய வாயில் கறுப்புத் துணி கட்டி அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். சம்பவம் தொடர்பான கண்டனத் தீர்மானமும் நேற்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"இந்தச் சபை ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் எமது சபை பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது.

வள்ளுவர் சிலையில் ஈழம் என்ற சொல் உள்ளது என்று கூறி முதன் முதலில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அக்கிராச மன்னன் திறப்பு விழா தொடர்பிலும், முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைப்பது தொடர்பிலும், தற்போது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்து கொண்டமைக்காகவும் பயங்காரவாதக் குற்றத் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தவிசாளர், உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் சிலர் பொலிஸாரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்த நிலையில், அதன் தொடர்ச்சியாக உறுப்பினர் செல்வநாயகத்துக்கு தற்போது பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் இருந்து அழைப்பு வந்திருக்கிறது.

அவரை கிளிநொச்சியில் விசாரிக்காமல் கொழும்புக்கு அழைப்பதென்பது உறுப்பினர்களை பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் செயற்பாடாகும்" இவ்வாறு சபையின் தவிசாளர் தெரிவித்தார். (ப-6)

# பரீட்சை எழுதச் சென்றோர் குளவி கொட்டுக்கு இலக்கு

## ஹற்றனில் சம்பவம்




**ஹற்றன், மார்ச் 11**

**குளவிக் கொட்டுக்கு இலக்கா**கிய பின்னர் 10 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய சம்பவம் ஹற்றனில் நேற்று இடம்பெற்றுள்ளது.

நல்லதண்ணி தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றச் சென்ற மாணவர்கள் 10 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. அவர்களில் 9 பேர் லக்சபான தோட்ட மருத்துவ அதிகாரியிடம் சிகிச்சை பெற்று பின்னர் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

ஒரு மாணவி மஸ்கெலிய மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைளிக்கப்பட்ட பின்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



# போர் மரபுகளை மீறியதன் விளைவே ஐ.நா. தீர்மானம்

## த.வி.கூ. பிரதமருக்குக் கடிதம்

**கொழும்பு, மார்ச் 11**

விடுதலைப் புலிகள் ஒரு கொரில்லாத் தாக்குதலை உள்ளடக்கிய ஒரு போராடும் அமைப்பு. அவர்கள் சர்வதேச போர் மரபுகளுடன்தான் போராட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இது உலகிலுள்ள சகல போராட்ட அமைப்புகளுக்கும் பொருந்தும்.

ஆனால் ஒரு ஜனநாயக நாடு, சர்வதேச போர் மரபுகளை மீறிச் செயற்பட முடியாது. அவ்வாறு செயற்பட்டதன் விளைவே இன்று ஐ.நா. தீர்மானத்தை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி, பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரில் இரண்டு தரப்பினராலும் விரும்பத்தகாத அடிப்படை மனித உரிமை மீறல்கள் அதிகமாகவே நடந்துள்ளன. அந்த நேரத்தில் சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஒரு ஜனாதிபதியாக நீங்கள் இருந்தீர்கள். மீண்டும் காலச்சக்கரம் மாறி, தாங்கள் பிரதமராகவும், தங்களது சகோதரர் ஜனாதிபதியாகவும் அரசைத் தீர்மானிக்கும் சக்தியாக, உங்கள் குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கியவாறு மிகவும் பலம் பொருந்தியவர்களாக உள்ளீர்கள்.

நீங்களும், உங்கள் குடும்ப உறுப்பினர்களும் நினைத்தால் ஒரே நாளில் எமது மக்கள் எதிர்நோக்குகின்ற பெரும்பாலான பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வைக் காணலாம்.

குறிப்பாக அரசியல் கைதிகளாக விடுதலைப் புலி உறுப்பினர்கள் மிக நீண்ட காலமாக சிறையில் வாடுகின்றனர்.

ஆனால் விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகளான சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) மற்றும் கருணா அம்மான் என்கின்ற வி.முரளிதரன் ஆகியோர் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்து செயற்படுகின்றனர்.

இது போன்றே ஜே.வி.பி. கிளர்ச்சி மற்றும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் போன்ற காலகட்டங்களில் பொது மன்னிப்புப் பெற்று விடுதலையான மிகப்பெரிய குற்றங்களில் ஈடுபட்ட பலரும், ஜனநாயக அரசியலில் கலந்து நாடு முழுவதும் வலம் வருகின்றனர்.

இந்தியாவில் இருந்து வந்த பௌத்த மதமே இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களுடைய மதமாக இருக்கின்றது.

எனவே இந்தியாவை ஒத்த ஒரு அரசியல் தீர்வை நாம் ஏற்றுக்கொள்வதற்கு எந்தத் தடையும் இருக்காது.

இன்றைய அரசாவது உண்மையான பௌத்த கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வதாயின், அதன்படி ஆட்சி நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். -என்றுள்ளது. (க)

# சுகாதார நடைமுறைகளைப் பேணாத சிகையலங்கரிப்பு நிலையத்துக்கு சீல்

**பருத்தித்துறை, மார்ச் 11**

பருத்தித்துறை புலோலி மேற்குப் பகுதியில் கொரோனாக் கட்டுப்பாட்டு பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றாது இயங்கிய சிகையலங்கரிப்பு நிலையமொன்று அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் நேற்றுமுன்தினம் பூட்டி சீல் வைக்கப்பட்டது. சிறைச்சாலையிலிருந்து பிணையில் விடுவிக்கப்பட்டு சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவர் தனிமைக்காலம் முடிவடைய முன்னரே சட்டவிரோதமாக வெளியேறி குறித்த நிலையத்தில் சிகையலங்கரிப்பு மற்றும் முடிக்கு வர்ணம் பூசுதல் ஆகிய சேவைகளைப் பெற்றிருந்தார் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், குறித்த சிகையலங்கரிப்பு நிலையம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அங்கு சேவைபெறுநருக்கான பதிவுகளெவையும் கிரமமாகப் பேணப்படாததோடு, குறித்த நபர் சேவைபெற்றமைக்கான பதிவுகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்றும், சம்பவத்தை மூடி மறைக்கும் விதமாக உரிமையாளர் உண்மைத் தகவல்களை மறைந்துள்ளார் என்றும் தெரிவித்த சுகாதாரப் பிரிவினர், தனிமைப்படுத்தப்பட்ட நபர் அங்கு சேவை பெற்றுள்ளார் என்பது உறுதி செய்யப்பட்ட நிலையில் கொரோனா கட்டுப்பாட்டுக்கு விரோதமாக செயற்பட்டமைக்காகவும் தொடர் விசாரணைகளுக்காகவும் அந்த சிகை அலங்கரிப்பு நிலையம் மூடப்பட்டது என்று தெரிவித்தனர். (ப)

# கோபுரம் அமைக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தம்

**வவுனியா, மார்ச் 11**

வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் மக்கள் குடியிருப்பில் முன்னெடுக்கப்பட்ட தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணி நகரசபையால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா உக்குளாங்குளம் திருச்செந்தூரன் மில் வீதியில் மக்கள் குடியிருப்புப் பகுதியில் தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்று அமைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கைக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இவ்விடயம் தொடர்பில் நகரசபைக்கு அறிவித்து, நடவடிக்கை எடுக்குமாறு கோரினர். இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை காலை உக்குளாங்குளம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் கிராமமக்கள், நகரசபைத் தவிசாளர், செயலாளர், நகரசபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேசசபை தவிசாளர்கள் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

சில தினங்களில் இச்செயற்பாட்டுக்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தடை உத்தரவு பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

அது வரையில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினது வேண்டுகோளின் பிரகாரம் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகளை தற்காலிகமாக நிறுத்துமாறு நகரசபையால் குறித்த நிறுவனத்துக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ப-110)

# மகா சிவராத்திரி




திருமதி மனோகரி ஜெகதீஸ்வரன்

சைவத்தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் சில விரதங்களுள் மகா சிவராத்திரியும் ஒன்றாகும். நித்திய சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மகா சிவராத்திரி எனப் பல சிவராத்திரி வகைகள் இருப்பினும் மகா சிவராத்திரி ஏனைய சிவராத்திரிகளை விடச் சிறப்பானது என்றே கூறப்படுகிறது.

இது வருடம் தோறும் மாசி மாத கிருஷ்ண பட்ச (தேய்பிறை) சதுர்தசியில் வருவது. இதனை வருட விரதம் என்றும் அழைப்பர்.

சிவன் லிங்கத்தில் தோன்றிய நாளே சிவராத்திரி என்றும், பிரமா,விஷ்ணுக்களிடையே சிவன் சோதி வடிவில் தோன்றிய நாளே சிவராத்திரி என்றும், புனர் உற்பத்திக்காகத் தேவி பூசை செய்த நாளே சிவராத்திரி என்றும் சிவராத்திரி பற்றிய பல புராணக்கதைகள் வழக்கில் உள்ளன.

> **சிவன் லிங்கத்தில் தோன்றிய நாளே சிவராத்திரி என்றும், பிரமா, விஷ்ணுக்களிடையே சிவன் சோதி வடிவில் தோன்றிய நாளே சிவராத்திரி என்றும், புனர் உற்பத்திக்காகத் தேவி பூசை செய்த நாளே சிவராத்திரி என்றும் சிவராத்திரி பற்றிய பல புராணக் கதைகள் வழக்கில் உண்டு.**

நானே பிரமம் நானே பிரமம் என்றும் ஆணவப் போர் செய்த பிரம்மா, விண்ணுவின் ஆணவத்தை அடக்கி, தனது பரத்துவ மேன்மையை உணர்த்த மாசி மாதத்து கிருஷ்ண பட்ச தேய்பிறை சதுர்த்தசியும்,சோம வாரமும்,திருவோண நட்சத்திரமும் கூடிய புண்ணிய தினத்தில் இரவு பதின்னான்கு (14)நாளிகைகள் சோதி வடிவமாகத் தோன்றினார் என்றும் கேட்ட அசரீரிக்கமைய அன்னப்பட்சியாக பிரம்மாவும்,பன்றியாக விஷ்ணுவும் மாறி, முறையே மலையின் முடியையும் அடியையும் தேடியும் காணாது வலுவிழந்து சோதியை வழிபடச் சிவன் சோதியின் நடுவே சிவலிங்க வடிவமாகத் தோன்றி அந்த லிங்கத்தினின்றும்,நீல கண்டமும்,முக்கண்ணும், மான் மரை ஏந்திய நிலையில் அபய வரத கரங்களுடன் வெளிப்பட்டதுடன் ஏனைய தேவர்களும் வணங்குவதற்காக ஒரு முகூர்த்த காலம் தரிசனம் தந்து மீண்டும் சோதியில் மறைந்ததாகவும் சொல்லப்படும் புராணச் செய்திகளும் நாமறிந்தவையே.

இலிங்கோற்பவம் எனும் சொல்லில் வரும் உற்பவம் என்பது தோற்றம். இலிங்கத்துள் நிகழும் தோற்றமே இது. ஆவுடையார் இன்றி, உருளை வடிவமான இலிங்கத்துனுள் மேலும் கீழும் பிறை வடிவமாக அமையும் வண்ணம், மேலே நெற்றி வரையும் கீழே முழங்கால் வரையுமுள்ள பகுதிகள் தெரியும் வண்ணம், குண்டலம், ஆரம், கோயூர்,முத்துமாலை அணிவுகளுடன் முன்னிரு கரங்கள் அபய விரதகரங்க ளாகத் திகழ பின்னிரு கைகளிலும், மான் மரை தாங்கிய நிலையில், வலது மூலையின் மேலே அன்னமும், இடது புறத்தின் கீழே வராகமும் (பன்றியும்) காணப்பட, இருபுறமும் பிரமா,விஷ்ணு கூப்பிய நிலையில் இருக்கும் வண்ணம் லிங்கோற்பவ மூர்த்தம் சிவாலய கருவறையின் மேற்குப் புறச் வெளிச் சுவரில் உள்ள கோஷ்டத்தில் மேற்கு நோக்கியவாறு அமைக்கப்படுவது வழக்கம். பிரம்மா விஷ்ணுவைச் சித்த ரிக்காது அன்னத்தையும்,பன்றியையும் சித்தரிக்கும் வழக்கமே அதிகமாக நடைமுறையில் உள்ளது. தென்னிந்தியச் சிவாலயங்களில் உள்ள வடிவங்களில் வலது கரம் அபயமாகவும் இது கரம் கட்டிய வலம்பிதமாக இடுப்பில் அமைந்து விளங்கும் நிலையும் கவனத்துக்குரியதே. மேலும் பால்,வயது, வேறுபாடின்றி விரும்பிய வர்கள் எவரும் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க முடியும். ஆனாலும் நியதிகளை அனுசரித்து, உள்ளத்தூய்மையுடன் அனுஷ்டிப்பது மிக மிக அவசியம். வயோதிபர்கள்,நோயாளிகள்,கர்ப்பிணிகள்,சிறுவர்கள் சில தளர்த்தல்களுடன் விரதத்தை அனுஷ்டிப்பதில் தவறில்லை என்றே சொல்லப்படுகிறது.

(மறுபக்கம் பார்க்க)

Nadarasa Kajanthan
Since 1978
New Maithily Jewellers
DEALERS IN GENUINE ORNAMENTS
நடராசா கஜந்தன்
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன்
No.38,40, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 221 78 78 Fax: 021 221 78 77
E-mail: newmaithily40@gmail.com newmaithily Jewellers 021-2217878





Nadarasa Kajanthan
Santhosh Jewellers
DEALERS IN GENUINE ORNAMENTS
நடராசா கஜந்தன்
சந்தோஷ் ஜுவலர்ஸ்
021-2211177 santhoshjewellers1188@gmail.com
santhoshjewellers 021-2211188
இல 97A, 99V, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். No.97A, 99V, POWERHOUSE ROAD, JAFFNA





(தொடர்ச்சி)

# மகா சிவராத்திரி



**சிவராத்திரி விரத நாளில் இரவு முழுவதும் விழித்திருக்க முடியாதவர்கள் லிங்கோற்பவ காலம் நீங்கும் வரையாவது விழித்திருப்பது நன்மை தரும் விடயமாகும்.**

**சிவராத்திரி விரத நியதிகள்**

1. சிவராத்திரி நாளுக்கு முதல் நாள் ஒரு வேளை உணவு உண்ணல்.
2. சிவராத்திரி தினத்தில் உபவாசம் இருந்து நான்கு சாமமும் சிவபூசை செய்தல் வேண்டும். சிவ பூசை செய்ய இயலாதவர்கள் விழித்திருந்து நான்கு சாமமும் சிவாலய தரிசனம் செய்தல் வேண்டும். உடல் உளத் தூய்மை இரண்டையும் பேணிய வண்ணம் சிவ சின்னங்கள் தரித்து பஞ்சாட்சர ஜெபம், ஸ்ரீருத்ர, தேவார திருவாசக பாராயணம் செய்தல், சிவ துதிகளை ஓதுதல், சிவராத்திரி புராணம், சிவபுராணம் என்பவற்றையும், சிவன் சிறப்புக் கூறும் கதைகளையும் படித்தல், கேட்டல் என்பவற்றில் ஈடுபடல்.
3. லிங்கோற்பவ காலத்தில் விசேட வழிபாட்டை நிகழ்த்துதல் மேற்கொள்ளுதல், இக்காலமே சோதி வடிவிலிருந்த சிவன் குளிர்த்து லிங்கத்தில் தோன்றிய புண்ணிய காலமாகும்.
4. சிவராத்திரி தினத்தின் மறுநாள் அதிகாலையில் நீராடிப் பாராயணம் செய்வதுடன் சிவனடி யாருக்கு மகேஸ்வர பூசையும் செய்தல் வேண்டும். இயன்றளவு ஏனைய தான தருமங்களைச் செய்வதும் சிறப்பு.
5. சிவராத்திரி விரத நாளில் இரவு முழுவதும் விழித்திருக்க முடியாதவர்கள் லிங்கோற்பவ காலம் நீங்கும் வரையாவது விழித்திருப்பது நன்மை தரும் விடயமாகும்.
6. சிவரா்திரி விரதத்தை அனுஷ்டிப்போர் தொடர்ந்து பன்னிரண்டு அல்லது இருபத்திநான்கு வருடங்கள் அனுஷ்டிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. மேலும் சிவராத்திரி விரத நாளில் உபவாசம் இருப்பது உத்தமம் என்றும், நீரேனும், பாலேனும் அருந்துதல் மத்திமம் என்றும் பழம் உண்ணுதல் அதமம் என்றும் சொல்லப்படுகிறது.

இறைவனுக்குரிய இராத்திரியான சிவராத்திரி தினத்தில் நான்கு சாமமும் வழிபட வேண்டிய மூர்த்தங்கள், அபிடேகத்திரவியங்கள், பட்டு நிறம், அர்ச்சனை மலர்கள் பத்திர(இலை)வகைகள், நிவேதனப்.... பொருள்கள், நறுமணத்தூபம், தீப வகைகள் அத்தனையும் விதிமுறைகளாகக் கூறப்பட்டுள்ளன.

ஈசன் லிங்கத்தில் பிரசன்னமாகி அடிமுடிதேடிய விஷ்ணு பிரமாவுக்கு காட்சியளித்தது. உமை தவமிருந்தது மட்டுமன்றி, அருச்சுனன் தவமிருந்து பாசுபாதம் பெற்றதும், பகீரதன் ஒற்றைக்காலில் தவமிருந்து கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்ததும், மார்கண்டேயருக்காக சிவன் யமனைச் சங்கரித்ததும், கண்ணப்ப நாயனார் கண்ணைப் பெயர்த்தெடுத்ததும் சிவராத்திரி தினத்திலேயே நடந்த சம்பவங்களாகும்.



சூரியன் முருகன், மன்மதன், சந்திரன், குபேரன் அக்கினி, எமன் முதலியோர் முறைப்படி இவ்விரத்தை அனுஷ்டித்துப் பேறுபெற்றமையையும் எறும்பு, நாரை, புலி, சிலந்தி, எலி போன்ற சிற் உயிரினங்களும் சிவபூசை செய்து மோட்சம் பெற்றமையையும் இலக்கியக் குறிப்புக்கள் எடுத்தியம்பி நிற்பதைக் காணலாம்.

கருட புராணம், கந்தபுராணம், அக்கினி புராணம், தேவாரத்திருமுறைகள் போன்ற இன்னோரன்ன இலக்கியங்கள் தரும் செய்திகளுடே சிவராத்திரி பற்றி நாம் அறிந்துகொள்ளலாம்.

மிகவும்இக்கட்டான சூழல் ஆனாலும் வாய்ப்பூட்டு மனதுக்கல்ல, இரவில் சிவாலய தரிசனத்துக்கு வகையற்ற நிலையிருப்பினும், வீட்டிலிருந்தே அனுஸ்டிக்க வேண்டிய கட்டாயமிருப்பினும், சிவசிந்தனைக்கு ஊறு ஏற்படாத வகையில் அனுஷ்டித்தால் மட்டுமே பயன் நிறைவு என்பதையும் மனதிருப்தி நியதிகளை அனுசரித்து உள்ளத் தூய்மையுடன் விரதத்தை அனுஷ்டித்து இகபர சுகங்களைப் பெற்று உய்வோமாக.



# சிவனே சிவபெருமானே!




**பல்லவி**
சிவனே சிவபெருமானே! என்
சிந்தையில் குடியிருக்க உளம் கொண்டவனே


**அனுபல்லவி**
கண்கண்டேன் உன் எழில் கண்டேன் - உன்
வருகை அதிர்வில் உண்மை கண்டேன்

**சரணம்**
உன்னை நொந்து நான் ஏங்கியபோது என்முன்
உதித்த என் சிவனே சிவபெருமானே!
உண்மை நீ என்றுரைப் பேன்
என் அன்பனே ஆனந்தமானவனே
என் தேடலுக்கு விடை தத்தவனே

மறப்பனோ எழுபிறப்பும் யான் உனை
தேடுவோர் தேடலுக்கு சாட்சியாக உன் திருமேனி
அழகை நான் பாடிப் பாடி பரவசமாவேனே.



- மலர் சின்னையா



## சிவனது மகா சிவராத்திரி...



இராத்திரி ஓ மகா சிவராத்திரி
கொரோனா மத்தியிலும் சிவராத்திரி
பாரிலே பக்தர்கள் கொண்டாடும் சிவராத்திரி
ஓ எங்கள் மகா சிவராத்திரி
நொந்த நெஞ்சங்களை காக்க வந்த இராத்திரி
சிவனது மகா சிவராத்திரி
திருமாலுக்கும் நான்முகனுக்கும்
தாழம் பூவுக்குமே
அரன்! பாடம் சொன்ன இராத்திரி

பரமன் பெருஜோதியாய் அங்கும் இங்கும்
என்றே எழுந்த இராத்திரி
உமை அம்மையே திகைத்துக் கொள்ள
எழுந்த இராத்திரி
வந்த நோய்கள் வருந்திட எழுந்த இராத்திரி
இந்த வன்முறைகள் விலகிட வந்த இராத்திரி
அப்பனது பேரருளுக்காய் நாம் வணங்கும் இராத்திரி
அம்மையையும் சேர்த்தே நாம் துதிக்கும் இராத்திரி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய



மீசாலையூர் கமலா



# முக்தி அளித்த வில்வ இலை!



சிவனுடைய அம்சமாகக் கருதப்படுவது வில்வ மரம். பெரும்பாலும் சிவ வழிபாட்டில் பிரதான இடத்தைப் பிடித்திருக்கும் விருட்சமாக வில்வ மரம் திகழ்கிறது. இதன் இலைகளின் வடிவம் சிவனின் திரிசூலத்தைக் குறிப்பதாகவும், இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தியைக் குறிப்பதாகவும் கருதப்படுகிறது. சிவபெருமானின் அம்சமாக விளங்குகிற வில்வ மரத்தை சிவராத்திரியின் போது வழிபடுதல் கூடுதல் நன்மையைத் தரும்.

**வில்வ வழிபாடு தோன்றிய கதை!**

ஒரு முறை வேடன் ஒருவன் வேட்டையாட காட்டுக்குச் சென்றான். வெகுநேரம் அலைந்து திரிந்தும் ஒரு விலங்கு கூட அவனிடம் சிக்கவில்லை. பொழுதும் நன்றாக இருட்டிவிட்டது. அப்போது அங்கே புலி ஒன்று வந்துவிட, அதற்குப் பயந்து அங்கிருந்த வில்வ மரத்தில் ஏறிக்கொண்டான்.

அந்த புலி அந்த மரத்தையே சுற்றி சுற்றி வந்தது. மரத்தில் கண் அயர்ந்தால், கீழே விழுந்து புலிக்கு இரையாகிவிடக்கூடும் என்பதால் தூக்கம் வராமல் இருக்க, அந்த மரத்தின் இலைகளை கீழே பறித்துப்போட்டுக் கொண்டே இருந்தான்.

அந்த இலைகள் எல்லாம் மரத்தின் அடியில் இருந்த சிவலிங்கத்தின் மீது விழுந்து கொண்டிருந்தன. மேலும், அன்றைய தினம் மகா சிவராத்திரி என்பதால் இரவு முழுவதும் சிவபெருமானை கண் விழித்து பூஜித்த பலனையும் தன்னை அறியாமலேயே பெற்றான் வேடன்.

அதன்காரணமாக, அந்த வேடனுக்கு முக்தி அளித்து மோட்சத்தை அருளினார் சிவபெருமான் என்கிறது புராணக்கதை. இத்தகைய சிறப்பு வாய்ந்த மகா சிவராத்திரியில், வில்வ இலைகளால் சிவபெருமானை வழிபாடு செய்து மோட்சத்தை அடையுங்கள்!


திருக்கயிலாயச் சிவலிங்கத்
திருமேனிக்கு நீராட்டிப் பூசிக்க

மறவன்புலவில் மகாசிவராத்திரி

திருக்கயிலாயம் சென்று, அங்கிருந்து சிவலிங்கத் திருமேனி எடுத்துக்கொணர்ந்து, மறவன்புலவில் அருள் நிலையாகியதே. திருக்கயிலாயத்துக்குச் சென்று நீராட்டிப் பூசிக்கும் பேறுற விழைவோர் மறவன்புலவு வருக. திருக்கயிலாய நாதரை நீங்களே நீராட்டுக. பூசிக்க தீக்கை கேட்க விழைவோர் முன்கூட்டியே தொடர்புகொள்க.

மாசி 27, வியாழன் (11.03.2021)
மாலை 06. 00 மணி தொடக்கம் வெள்ளி காலை 06. 00 மணி வரை
அருள்மிகு வள்ளைக்குளம் வீரகத்திப் பிள்ளையார் திருக்கோயில், மறவன்புலவு, சாவகச்சேரி.
உயிரொளிசிவம் பிரதாபனார் +94 774 978 294 +94 761 200 845





திருச்சிற்றம்பலம்
வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளிந்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
திருச்சிற்றம்பலம்
அப்பர் தி 06055001



அறிமுகமாகின்றது.......

The Next generation EVRO RO System

உலகத் தரம் வாய்ந்த EVRO® Best forever..... நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்






நீங்கள் அருந்தும் நீரில் அடங்கியுள்ள மேலதிக கல்சியம், மக்னீசியம், மாசுக்கள் மற்றும் கொடிய நோய் தொற்றுக் கிருமிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள EVRO நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை இன்றே பொருத்திப் பயன் பெறுங்கள்.

FREE
1 Installation
2 Service & Maintenance
3 Warranty

இறக்குமதி செய்து விநியோகிப்போர் : நீர் சுத்திகரிப்பு துறையில் முன்னோடியும், சுற்றாடல் அதிகார சபையினால் அங்கிகரிக்கப்பட்டதுமான

Everpure Hi-Tec (Pvt) Ltd.
Professional in Total Water Management
HOTLINE : 075 331 3310

JAFFNA
NO.581, K.K.S ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 6888

KILINOCHCHI
NO.677, A9 ROAD, KARADIPOKKU JUNCTION, KILINOCHCHI.
TEL : 021 228 4888 HOTLINE : 077 844 7280

VAVUNIYA
NO.65, VAIRAVAKOVIL ROAD, VAIRAVAPULIYANKULAM, VAVUNIYA.
TEL : 024 222 6008 HOTLINE: 075 331 3303

## இன்றைய நாள்

**மேடம்:** மூத்தோர் உடல்நலம் மேம்படும். திடீர் நட்பு உருவாகலாம். உங்களின் பெருந்தன்மையான செயல் மதிப்பைப் பெற்றுத் தரும். பணியிட சலசலப்பைப் புன்னகையுடன் சமாளிப்பீர்கள்.

**இடபம்:** மகிழ்ச்சியளிக்கும் செய்தி ஒன்று அலைபேசியில் வரும். வாழ்க்கைத்துணையின் கோபத்தைச் சமாளிப்பீர்கள். கண் சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினை தீர்ந்து நிம்மதி தரும்.

**மிதுனம்:** கடந்த இரு நாள்களாக இருந்து வந்த ஆதங்கம் தீரும். நேர்மையற்ற செயல் எதைச் செய்தாலும் மாட்டிக்கொள்வீர்கள். நண்பர்களின் வற்புறுத்தலால் தவறு செய்ய வேண்டாம்.

**கடகம்:** மனதுக்கு மகிழ்ச்சி கிடைக்கும். பாதியில் விட்டுப்போன முயற்சி இன்று மீண்டும் தொடரும். சுற்றியிருப்பவர்கள் உதவுவர். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**சிம்மம்:** நல்லவர்களை இனம் காண்பீர்கள். பதறாமல் முடிவெடுப்பது நல்லது. நண்பர்கள் நற்செய்தி தருவர். எண்ணங்கள் அதிகமாக அலைபாயும். முயற்சி நல்ல பலன் தரும்.

**கன்னி:** பிள்ளைகளின் முயற்சியால் பொருளாதார நிலை உயரும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசியவர்கள் விலகுவர். தடைப்பட்ட முயற்சிகள் நல்லபடியாக முடியும்.

**துலாம்:** எதையும் முடிவெடுக்க இயலாமல் குழப்பம் ஏற்படும். தேவையற்ற எண்ணங்களை விலக்கி நிம்மதி அடைவீர்கள். உங்களின் கட்டளையை நிறைவேற்றக் காத்திருப்போர் அதிகரிப்பர்.

**விருச்சிகம்:** மனத்திடம் காரணமாக நல்ல செயல் ஒன்றை முடிப்பீர்கள். தாயின் ஆசையை நிறைவேற்றி மகிழ்வீர்கள். நிம்மதி பிறக்கும். திட்டம் ஒன்றைப் வகுத்து நிறைவேற்ற நாள் பார்ப்பீர்கள்.

**தனுசு:** எடுத்த முயற்சியில் நண்பர்களின் ஆலோசனை கைகொடுக்கும். குதுாகலமான நாளாகும். சோம்பல் கார ணமாக சிரமம் வரும். விரும்பிய தெய்வ வழிபாட்டை நடத்துவீர்கள்.

**மகரம்:** முன்பிருந்த அளவுக்கு வாழ்க்கை சுலபமாக இருக்காது. அண்மைய நிகழ்ச்சியால் உருவான மனக்கலக்கம் குறையும். பழைய பயம் தீரும்படியான சம்பவம் ஒன்று நிகழும்.

**கும்பம்:** புகழ் பெறுவீர்கள். மனதில் சந்தோஷம் நிறைந்திருக்கும். செலவுகள் நிறைய வரும். மாற்று மருத்துவம் பயன்தரும். சக பணியாளர்களுடன் ஏற்பட்ட மன பேதம் விலகும்.

**மீனம்:** புதிய விடயம் ஒன்றைத் தொடங்கும் முயற்சி பலிக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். வருமானம் கூடுவதால் சேமிப்பில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

## தவக்கால சிந்தனை

### காணாமலாக்கப்பட்டோருக்காக செபிப்போம்

ஜெத்சமெனித் தோட்டத்தருகே சீடர்கள் ஆழ்ந்து நிற்க துரோகி யூதாஸின் பணத்தாசையால் இயேசு கைதுசெய்யப்பட்டு சித்திரவதைகளுக்குள்ளாகி சிலுவை சுமத்தப்பட்டு கல்வாரி குன்றிலே சிலுவைத் தண்டனையை நிறைவேற்றினார்கள் யூத தலைமைக்குருக்கள். அன்னை மரியாளும் அங்கே அச்சத்துடன் மனதுருகி நின்றிருந்தார்.

தன் முன்னே ஒப்படைக்கப்பட்டு காணாமல் போன தம் பிள்ளைகள் உறவுகளைத் தேடியலையும் துன்பியல் படலம் இன்றும் தொடர்கின்றது. அன்னை மரியாளின் வியாகுலங்களை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர் அனுபவிக்கின்றனர். முப்பத்து மூன்று வயது இளைஞன் இயேசுவின் மரணம் தேவமாதாவை எப்படி உலுக்கியிருக்கும். இழந்தவர்களுக்குத்தான் இழப்பின் கனாகனமும் துன்பமும் தெரியும். பலவருடங்களாக தம் பிள்ளைகளாகக் காண வேண்டும், கட்டி அணைத்து முத்தமிட வேண்டும் என்று தொடர் வேண்டுகை புரியும் தாய்மார்கள், தம் ஆசை நிறைவேறாமலே தம் ஆயுளை முடித்துக்கொண்ட சம்பவங்கள் ஏராளம். "துன்புறும் உன் அயலானில் நீ என்னைக் காணவில்லையா" என்கிறார் இயேசு. இந்த தவக்காலத்திலே காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீரைத் துடைக்க செபிப்போம். சிறையில் வாடும் கைதிகள் விடுதலை பெற்று குடும்பங்களுடன் இணைய மன்றாடுவோம். ஆட்சியாளர்கள் நீதி, நேர்மை மனிதாபிமானத்தைக் கருத்தில்கொண்டு செயலாற்றும் மனமாற்றத்தை கல்வாரி நாயகன் கொடுத்தருள வேண்டும்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை



பூநகரி வாடியடிப் பகுதியில்

# கவனிப்பாரற்ற நிலையில் சந்தைக் கட்டடத் தொகுதி

### இயங்கவைக்குமாறு மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, மார்ச் 11**

**பூநகரி பிரதேசத்தின் வாடியடிப் பகுதியில் அமைக்கப்பட்ட பஸ் நிலையம் மற்றும் பொதுச் சந்தையுடன் கூடிய கட்டடத்தொகுதி கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

2014ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில், பொருளாதார அமைச்சின் நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா செலவில் இது அமைக்கப்பட்டது. பஸ் நிலையத்துடன் மரக்கறி விற்பனைச் சந்தை, கடலுணவு விற்பனை சந்தை, இறைச்சி விற்பனைக் கடைகள் மற்றும் 34 கடைகளைக் கொண்ட விற்பனை நிலையத் தொகுதி என்பன அங்கு அமைந்துள்ளன. ஆனால் போக்குவரத்தில் ஈடுபடும் கிளிநொச்சி- பூநகரி வழித்தட பஸ்களைத் தவிர வேறு எவையும் அங்கு நிறுத்தப்படுவதில்லை. மக்கள் வரவின்மையால் அங்குள்ள கடைகள் மூடப்பட்டுள்ளன. கடைகளை ஒப்பந்த அடிப்படையில் பெற்றவர்களில் சிலர் தற்போது பழைய சந்தை இருந்த இடத்தில் தற்காலிக கடைகளை அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், தமக்கு நிரந்தரக் கடைகளை அமைக்க அனுமதி தருமாறு பிரதேச சபை யைக் கோரியுள்ளனர். இந் நிலையில் யாழ்பாணம், மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள பஸ் நிலையத்துடன் சேர்ந்த சந்தைக் கட்டடத் தொகுதி வினைத்திற னோடு இயங்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-12)

# குளுக்கோமா நோய்க்கு அறிகுறிகள் இருக்காது

### மருத்துவர்களைச் சந்திக்க ஆலோசனை

கொழும்பு,மார்ச் 11

குளுக்கோமா நோய்க்கு ஆரம்ப கட்டங்களில் எந்த அறிகுறிகளும் இருக்காது. இதனை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் கண் பார்வைப் பாதிப்பை தவிர்க்க முடியும். எனவே 40 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அரச மருத்துவமனைகளில் அல்லது கண் மருத்துவர் ஒருவரைச் சந்தித்து, பரிசோதனை செய்யலாம் என்று கண் மருத்துவர்கள் வலியுறுத்தியுள்ளனர். குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு, கொழும்பு தேசிய கண் மருத்துவமனையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் மருத்துவர்கள் இதனை வலியுறுத்தினர். "குடும்பத்தில் ஒருவர் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், ஏனைய குடும்ப உறுப்பினர்களும் கண்களைப் பரிசோதிப்பது மிகவும் முக்கியமானது" என்று தொற்று நோய் மருத்துவர் சம்பிகா விக்ரமசிங்க தெரிவித்தார். குளுக்கோமா வாரம் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள நிலையில், எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-இ)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு இலவச மின்சாரம்

சாவகச்சேரி, மார்ச் 11

தென்மராட்சி பிரதேசத்தில் மின்சார வசதி இல்லாத சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்களுக்கு சமுர்த்தி அமைச்சின் ஊடாக இலவச மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட மின்வசதி இல்லாத 507 குடும்பங்களின் விவரங்கள் சமுர்த்தி திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவர்களில் வீட்டுக்கு மின் இணைப்பு இல்லாதவர்கள் இணைப்புப் பெறுவதற்கான உள்ளக மின்னிணைப்பு வேலைகளை மேற்கொள்ள தலா 20 ஆயிரம் ரூபா வீதம், கடனும் வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-ஓ)

# நிகழ்வுகள்

### சிவராத்திரி நிகழ்வுகள்

கொடிகாமம், மார்ச் 11
சரசாலை, நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் மகாசிவ ராத்திரி தினத்தை முன்னிட்டு இன்று நான்கு சாம அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள் ளன.
அத்துடன் சங்கடகர சதுர்த்தி பூஜைகளும் மாதாந்தம் நடை பெறும் என்றும் ஆலய குரு அறிவித்துள்ளார். (ச-159)

★★★

யாழ்ப்பாணம், மார்ச் 11
இணுவில் தெற்கு அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞான லிங்கேச்சுரர் திருக்கோயிலில் சிவராத்திரி தினத்தை முன் னிட்டு இன்று விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

★★★

யாழ்ப்பாணம், மார்ச் 11
யாழ்.இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை யும் காமாட்சி அறநெறிப் பாட சாலையும் இணைந்து நடத் தும் சிவராத்திரி நிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப.4 மணிக்கு தலையாழி அருள் மிகு சாமுண்டாதேவி ஞான வைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை திறந்த வெளி அரங் கில் பாடசாலை அதிபர் கலாநிதி எஸ்.பி.காசிநாதன் தலைமை யில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினரா யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுநானந்தா கலந்துகொள்ள வுள்ளார். (ச)

★★★

கொடிகாமம், மார்ச் 11
மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நுணாவில் மேற்கு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத் திரர் ஆலயத்தில் இன்று வியா ழக்கிழமை இரவு 7 மணிதொ டக்கம் காலை 4 மணிவரை சிறப்பு நிகழ்வுகள் நடைபெற வுள்ளன.
இந்த நிகழ்வில் அறநெறி மாணவர்களது கலை நிகழ்வு களும், விசேட நிகழ்வாக தேசிய சேவைகள் மன்ற கண்டி மெல் வூட் நுண்கலைக் கல்லூரி விரிவுரையாளர் றொபின்சன் குழுவினரின் மெல்லிசை கானமும் மற்றும் மாணவி நிறோவின் பக்திப்பாடல் நிகழ் வும் இடம்பெறவுள்ளன.

குறித்த நிகழ்வில் அனைவரை யும் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக் கொள்கின்றனர். (ய-159)

★★★

வவுனியா, மார்ச் 11
வவுனியா ஸ்ரீநகர் ஸ்ரீதுர்க்கை அம்மன் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு விசேட நான்கு ஜாமப் பூசைகள் இன்று இடம்பெறவுள்ளன.
இந்தப் பூசை வழிபாடுகளில் அனைவரையும் கலந்துகொள்ளு மாறு ஆலய பரிபாலனசபையி னர் கேட்டுக் கொண்டுள்ள னர். (ய-110)

### பரிசில் வழங்கலும் கௌரவிப்பும்

பளை, மார்ச் 11
பளை இயக்கச்சி மல்வில் கிருஷ் ணன் கோயிலில் அறநெறி விழா சிவராத்திரி தினமான இன்று இரவு கோயில் முன்றலில் நடைபெறும்.
கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.கேதீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.
நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர் கள் மற்றும் பல்கலைக்கழக அனு மதி பெற்ற மாணவர்களுக்கு பரி சில் வழங்கலும் கௌரவிப்பும் இடம்பெறும். (ய-9)

### கௌரவிப்பும் கலை நிகழ்வும்

யாழ்ப்பாணம், மார்ச் 11
யாழ். உடுவில் குபேரகா கலை மன்றத்தின் சமூக சேவையாளர் மற்றும் கலைஞர்கள் கௌரவிப் பும் மாபெரும் கலை நிகழ்வுகளும் மகா சிவராத்திரி தினமான இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு உடுவில் மல்வம் குபே ரகா கலைமன்ற வளாகத்தில் கலைமன்ற நிறைவேற்று இயக்கு னர் ம.ரவிசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ய-159)

### விசேட பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 11
நாட்டு மக்கள் அனைவரும் கொரோனாத் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந் தும் மீள்வதற்காக, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்க ளத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி தென்மராட்சி சங்கத் தானை வைரவசுவாமி கந்த சுவாமி ஆலயத்தில் நாளை வெள் ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன. (ச)

# மூழ்கவிருந்த மூவர் மீட்பு

முல்லைத்தீவு, மார்ச் 11
கொக்கிளாயிலிருந்து முல்லைத்தீவுக்குப் பயணித்த ஜீப் ரக வாகனம் ஒன்று, நாயாறு களப்புக்குள் குடைசாய்ந்துள்ளது. அதன் போது நீரில் மூழ்கவிருந்த மூவர் காப்பாற் றப்பட்டுள்ளனர். இவ் விபத்து இடம்பெற்ற பகுதிக்கு அருகில் கடமையிலிருந்த படை யினரால் இவர்கள் காப்பாற்றப்பட்டதுடன் வாகனமும் மீட்கப்பட்டுள்ளது. இதை யடுத்து அவர்கள் சிகிச்சைக்காக மாஞ் சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளனர். (வ-இ)

# சிவராத்திரி நாளில் சுகாதார விதிமுறைகளை மீறாதீர்!

## ஜனாதிபதி வலியுறுத்து



கொழும்பு,மார்ச் 11
கொவிட் 19 தொற்றுநோய் பரவலின் கார ணமாக, சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி மகா சிவராத்திரியைப் பக்தர்கள் அனுஷ்டிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வேண்டுகோள் விடுத் துள்ளார்.
மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அவ ரது ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,
பழங்காலத்திலிருந்தே இலங்கை வாழ் இந் துக்களின் இந்த அற்புதமான கலாச்சார விழா, எமது சமூகத்துக்கு அளவிடற்கரிய பெறுமதியைச் சேர்த்துள்ளது. இந்த சமய நடைமுறைகள் பல்வகை கலை, இலக்கிய அம்சங்களைப் போன்றே சிறந்த நடனப் பாரம்பரியத்துக்கும் வழிவகுத்துள்ளது.
மகா சிவராத்திரி தின தீப ஒளி இந்து மக்க ளின் ஆன்மீகத்தை ஒளியூட்டுவதைப் போன்றே சமூகத்தில் அமைதி, நல்லிணக் கம் மற்றும் மகிழ்ச்சியை அடைந்துகொள் வதற்கும் சிவபெருமான் அருள்புரிய வேண் டும் - என்றுள்ளது. (க)

# கோடரியால் தாக்கப்பட்டு இருவர் மருத்துவமனையில்

நவாலி,மார்ச் 11
நவாலி வடக்கு விவசாய சம்மேளனத் தலைவர் மற்றும் அவரது சகோதரர் ஆகியோர் கோடாரித் தாக்குதலில் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்த தாக்குதல் சம்பவம் கடந்த சனிக்கிழமை நவாலி வடக்கில் இடம்பெற்றது.
நவாலி வடக்கு தூக்குணி வைரவர் ஆலயத்துக்கு செல்லும் மானிப்பாய் பிரதேச சபைக்குரிய வீதி யில் வழித்தடம் செய்து துாண் நிறுத்தியதை பார்வையிடச் சென்ற சம்மேளனத் தலைவர் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவம் தொடர் பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# 14 விமானங்களில் 978 பேர் நாட்டுக்கு

14 விமானங்கள் ஊடாக 978 பய ணிகள், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக நாட்டை வந்தடைந்துள்ளனர்.
அவர்களில் 185 பேர் கட்டாரில் இருந்து வருகை தந்துள்ளனர்.
அதேவேளை 332 பயணிகள் சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுக் குப் புறப்பட்டுள்ளனர். ஜேர்மனி, போலந்து, ஆஸ்திரேலியா, எகிப்து, பிலிப்பைன்ஸ், நெதர்லாந்து, மற் றும் உக்ரைன் ஆகிய நாடுகளில் இருந்து 72 சுற்றுலாப் பயணிக ளும் நாட்டுக்கு வருகை தந்துள்ள னர் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (க-இ)

# அதிபர் விடுதிக் காணி யூனியன் கல்லூரிக்கே உரியது


## *கல்வி அமைச்சின் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 11
தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அதிப ரின் விடுதி அமைந்துள்ள காணி, கல்லூ ரிக்கே உரித்துடையது என வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித் துள்ளார்.
குறித்த காணி தொடர்பில் இலங்கை அமெ ரிக்க மிஷன் தேவாலயப் பிரிவினருக்கும், கல்லூரி சமூகத்தினருக்கும் இடையில் பல மாத காலமாக முரண்பாடு நிலவி வருகின்றது.
இது தொடர்பில் ஆவண ரீதியான ஆதாரங் களை மாவட்ட நில அளவை அத்தியட்சகர் பிரிவு மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற் றிலிருந்து பெற்று ஆராய்ந்துள்ள நிலை யில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனால் கல்வி அமைச்சின் அலுவலகத்தில் கலந்துரையா டல் ஒன்று நேற்றுமுன்தினம் ஒழுங்கு செய்யப்பட்டது.
காணி தொடர்பாக நில அளவைத் திணைக் களம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவை கல்லூரிக்கே உரித்தானது என உறுதிப்ப டுத்தியுள்ளதால் இக் காணி கல்லூரி நிர் வாகத்துக்கே உரியது எனவும் தொடர்ந்து அந்தப் பகுதி பிரதேச செயலாளருடன் தொடர்புகொண்டு உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் இக் கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட் டுள்ளது. (வ-39)

சூட்கேஸிலிருந்து மீட்கப்பட்ட பெண்ணின் சடலம்:

# உயிரிழந்த பின்னரே அறுக்கப்பட்டது தலை

உடற்கூற்றுப் பரிசோதனையில் தகவல்



**கொழும்பு,மார்ச் 11**

**டாம் வீதியில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் சூட்கேஸிலிருந்து மீட்கப்பட்ட பெண் உயிரிழந்த பின்னரே அவரது உடலிலிருந்து தலை வெட்டப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.**

கொழும்பு விசேட சட்ட மருத்துவ அதிகாரி ரூஹுல் ஹக் முன்னெடுத்த உடற்கூற்றுப் பரிசோதனைகளில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இரத்தினபுரி குருவிட்டை தெப்பனாவப் பகுதியைச் சேர்ந்த 30 வயதான திலினி யசோதா ஜயசூரிய மெனிகே என்பவரின் சடலமே சூட்கேஸிலிருந்து மீட்கப்பட்டது என்று மரபணு பரிசோதனை யில் (டி.என்.ஏ.) உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த பெண் எவ்வாறு உயிரிழந்தார் என்பதை உறுதியாகக் கண்டறிய, அவரது தலைப் பகுதி அவசியம் என்று சட்ட மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். அதனால் அவரது தலையை தேடி விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.


பொலிஸ் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள தலையற்ற சடலத்தின் ஆள் அடையாளம் டி.என்.ஏ. பரிசோதனை ஊடாக உறுதியான பின்னர், உடற்கூற்றுப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. உடற் கூற்றுப் பரிசோதனைகளில் முக்கியமான தகவல்கள் வெளிவந்துள்ளன. அவர் இறக்கும்போது கர்ப்பிணி அல்ல. அத்துடன் இறுதியாக உணவு உண்டு 2 முதல் 3 மணித்தியால நேரத்தில் அவரது உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது. உயிரிழப்புக்கான காரணம், உறுதியாக கண்டறியப்படவில்லை. பெண் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என சந்தேகிக்கப்படும் நிலையில், சந்தேக நபரான உப பொலிஸ் பரிசோதகரும் தற்கொலை செய்துள்ளார். அறிவியல் தடயங்களை வைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)



## 38 கைத்துப்பாக்கிகள் மீட்பு: சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 11

கொழும்பு, மாளிகாவத்தை பகுதியில் 38 கைத் துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் 34 வயதுடையவர் என்றும், அவரிடமிருந்து 2 கிராம் ஹெரோய்னும், 18 கிராம் ஐஸ் மற்றும் 10 கிராம் கஞ்சா ஆகிய போதைப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-இ)



## ஓட்டமாவடியில் 38 ஜனாஸாக்கள் நல்லடக்கம்

மட்டக்களப்பு, மார்ச் 11

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்கள் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் அடக்கம் செய்யப்பட்டு வரும் நிலையில், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வரையான 5 நாள்களில் 38 ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நேற்றுமுன்தினம் 5 ஆண்களின் ஜனாஸாக்களும் 2 பெண்களின் ஜனாஸாக்களுமாக 7 ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ச-150)

## நாட்டின் மருந்துத் தேவை 2-3 ஆண்டுகளில் நிறைவு

கொழும்பு,மார்ச் 11

இலங்கையின் மருந்துத் தேவையில் 50 சதவீதத்தை எதிர்வரும் 2 தொடக்கம் 3 ஆண்டுகளில் பூர்த்தி செய்வதற்கு அரசு எதிர்ப்பார்த்துள்ளது.

இதன்படி ஹொரனை - மில்லாவ பகுதியில் மருந்து உற்பத்தி வலயம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மருந்து உற்பத்தி வலயத்தின் ஊடாக புற்றுநோய் தடுப்பு மருந்துகள், என்பியல், நரம்பியல், இதய அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் கண் வில்லை ஆகியனவற்றையும் உற்பத்தி செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. இரண்டு கட்டங்களாக ஆரம்பிக்கவுள்ள இந்தத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளுக்காக 8 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)




## 68 கிலோ ஹெரோய்னுடன் இருவர் கைது

மாத்தறை,மார்ச் 11

68 கிலோ கிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். மாத்தறை, தியந்தரப் பகுதியில், சந்தேகநபர்கள் பயணித்த கார் நேற்றுமுன்தினம் சோதனையிடப்பட்டபோது, ஹெரோய்ன் மீட்கப்பட்டது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். சந்தேகநபர்கள் நீர்கொழும்பு மற்றும் கண்டி பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)



## நாட்டை வந்தடைந்தன 10 ரயில் பெட்டிகள்

கொழும்பு,மார்ச் 11

இந்தியாவில் இருந்து 10 ரயில் பெட்டிகள் நேற்றுமுன்தினம் நாட்டை வந்தடைந்தன.

இந்திய கடனுதவியில் ரைட்ஸ் நிறுவனம் இலங்கைக்கு .160 ரயில் பெட்டிகளை வழங்கவுள்ளது. இதன் முதற்கட்டமாகவே நேற்றுமுன்தினம் 10 ரயில் பெட்டிகள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன. (ஐ-இ)

## 43 வயதான யானை மின்சாரம் தாக்கி சாவு

கொழும்பு,மார்ச் 11

43 வயதான ரேவதா என்ற யானை, மின்சார வேலியில் சிக்கி நேற்று முன்தினம் உயிரிழந்தது. கலா பலலு வாவிக்கு இடையிலான பள்ளத்தாக்கில் சுதந்திரமாக சுற்றித் திரிந்த அந்தக் கம்பீரமான யானை, பயிர்செய்கையைப் பாதுகாப்பதற்காக முறையற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளது என்று வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (க-இ)

## தடுப்பூசி பெற்றவர்களுக்கு தனிமைப்படுத்தல் விலக்கு?




கொழும்பு,மார்ச் 11

கொவிட் தடுப்பூசி பெற்றவர்களை கட்டாயத் தனிமைப்படுத்தலில் இருந்து விலக்க முடியுமா என்பது தொடர்பில் பரிசீலிக்கப்படுகின்றது.

கொவிட் பணிக்குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அமைவாக, சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழு இதனை ஆராய்ந்து வருகின்றது. அதேவேளை வெளிநாடுகளில் இருந்து திரும்பும் இலங்கையர்களுக்கான தனிமைப்படுத்தல் காலத்தைக் குறைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் நாள்களின் எண்ணிக்கையை 7 நாள்களாகக் குறைக்க பரிந்துரை செய்யப்பட்டது. எனினும் பின்னர் தற்போதைய 14 நாள்களில் இருந்து தனிமைப்படுத்தல் காலத்தை 10 நாள்களாகக் குறைக்க பரிந்துரைக்கப்பட்டது. அத்துடன் வணிகப் பயணிகளுக்கான தனிமைப்படுத்தல் காலத்தை மறுஆய்வு செய்வதற்கான திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது. (க-இ)

ஓம் ஸ்ரீ விராட்விஸ்வப்பிரம்மனே நமஹ!

# 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வு அழைப்பும்

மலர்வு 24 - 12 - 1926



உதிர்வு 09 - 02 - 2021

## அமரர் அப்பாத்துரை சாம்பசிவம்

**(முன்னாள் உத்தியோகத்தர், சீமெந்துத் தொழிற்சாலை, காங்கேசன்துறை)**

அன்புள்ள அப்பாவே! நீங்கள் மறைந்து 31 நாள்கள் ஆகிவிட்டதே என்செய்வோம்? விதி யாரை விட்டது. உங்கள் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ காமாட்சி அம்பாளைப் பிரார்த்திக் கின்றோம். எனது அன்பு மாமாவே! உங்கள் பாசமுள்ள முகம் எம் நெஞ்சை விட்டு மறையவே மறையாது! உங்களை நாம் எப்படி மறப்பது? எப்படி மறக்கமுடியும்? ஆத்மா சாந்தி பெற கரவெட்டி யாக்கருப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

கடந்த 09.02.2021 இல் அமரராகி விட்ட எங்களின் அன்புத் தந்தையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (11.03.2021) (மகா சிவராத்திரி நாளில்) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணி அளவில் யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் நாச்சிமார் கோயில் தெற்கு வீதியிலுள்ள கல்யாண மண்டபத்தில் நடைபெறுகின்றது. ஆகவே அதிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப் பித்து சாம்பசிவம் அவர்களின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றோம்.**

**ஜேர்மனியிலிருந்து அன்பு மருமகன் ரகுநாதன் சிவபாதசுந்தரம்**
**பாசமிகு அன்பு மகள் கௌதமி**
**T.P : 0049 152 180 13838, 0049 151 449 384 15**
**கனடாவிலிருந்து அன்புள்ள மகன் ஜனகன்**
**T.P : 001 416 579 7594**
**1029/9 (555/4) மதவடி ஒழுங்கை,**
**காங்கேசன் துறை வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.**

---



மட்டுவில்

பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

# பங்குனித்திங்கள் உற்சவம் - 2021

**15. 03, 22. 03, 29. 03, 05. 04, 12. 04. 2021**

ஆகிய திங்கட்கிழமைகளில்

இவ் வருடத்திற்கான

## பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம்

இடம்பெறுகின்றது.

காலை 5.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை பக்தர்கள் வழிபாடுகளை மேற்கொள்ள முடியும்

COVID 19 சுகாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு உற்சவம் தொடர்பாக பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

- சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி வழிபாடுகளில் ஈடுபடவேண்டும் (முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணுதல், கைகளை சவர்க்காரமிட்டு கழுவுதல் கட்டாயமானதாகும்)
- பொங்கல் செய்வோர் ஆலய அலுவலகத்தில் அல்லது **021 373 5259** என்ற தொலைபேசி ஊடாகவோ தங்களுக்குரிய இடம், நேரம் என்ப வற்றை பதிவுசெய்யவேண்டும் (பதிவுகளை தினமும் காலை 9.00 தொடக்கம் மதியம் 12.00 மணிவரை மட்டுமே மேற்கொள்ளமுடியும்) பதிவுசெய்து அனுமதிச் சீட்டைப் பெற்றவர்கள் பொங்கலை மேற்கொள்ள முடியும்.
- அர்ச்சனைக் கடை தவிர்ந்த ஏனைய கடைகளுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.
- மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பக்தர்களே ஒரே நேரத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என்பதனால் ஏனையவர்களுக்கு வழிபட சந்தர்ப்பம் வழங்கும் வகையில் பக்தர்கள் வழிபாடுகள் நிறைவடைந்தும் ஆலய வளாகத்தினைவிட்டு வெளியேறி ஒத்துழைப்பு நல்கவேண்டும்.
- அன்னதானம் வழங்குதல் தவிர்க்கப்பட்டுள்ளது.


**முக்கிய குறிப்பு:**

**ஆலயத்தின் பெயரால் பணம், பொருள் சேகரிப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.**

**தர்மகர்த்தா**
**சிவ. பஞ்சாட்சரம்**

---

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மலர்வு: 15.03.1939** **அமரத்துவம்: 11.03.2009**

## அமரர் உயர்திரு. வயிரமுத்து குலசிங்கம்

**(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை)**

பாசத்தின் உறைவிடமாய் எம்மோடு வாழ்ந்த உத்தமரே
மண்ணில் தோன்றிய நாள் முதல் மாண்புறு வாழ்க்கை வாழ்ந்து
எண்ணிய யாவும் எமக்காற்றி புண்ணியம் பல செய்து புகழுடமானீர்கள்
ஆவி துறந்து ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள் அன்பு முகம்
எம் முன் தெரிகிறதே ஐயா தூங்கி விட்டீர்கள் நிம்மதியாக
துடிக்கிறது எங்கள் உள்ளம்


Mrs.S.Kulasingam
London.
11.03.2021

உங்கள் பிரிவால் வாடும்
**அன்பு மனைவி,**
**பெறாமக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், மைத்துனிமார்.**

---

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 - 04 - 1939



மறைவு 09 - 03 - 2021

## தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி

காரைநகர் சத்திரந்தை களபூமியைப் பிறப்பிடமாகவும் புதுவீதியை வசிப்பிடமாகவும் தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம் பிள்ளை பரமேஸ்வரி அவர்கள் 09.03.2021 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ் சென்றவர்களான இராமலிங்கம் சிவகாமியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, கனகம்மா, சிவராசா, வள்ளியம்மை ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான நேசம்மா, சற்குணராசா, மற்றும் கதிர்காமநாதன் (வவுனியா) ஆகியோரின் அன்பு தாயாரும் கணேசமூர்த்தி, நிர்மலாதேவி, புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், யசோதரன் (சுழிபுரம்), யாழினி, சிந்துஜா, ஜனனன் (வவுனியா), ஜங்கரன், சஜிபா, அகச்செல்வி (மல்லாவி), பிரதிபன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தனோஜனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக இன்று (11.03.2021) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு சாம்ப லோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 134 0009**
**077 246 7375**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## அலுவலக உதவியாளர் தேவை

யாழ் நகரில் வியாபார நிறுவன மொன்றிற்கு அலுவலக உதவியாளர் (பெண்) தேவை.
கணினி அறிவு அவசியம்.

**077 968 2165**
Email: patricprasath@gmail.com

## விநியோகஸ்தர்கள் தேவை

**Aqua Pearl Water**
**தண்ணீர் கம்பனிக்கு**
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார், வவுனியா
தொடர்பு:
**076 818 6450, 076 213 1197**

## மருந்தாளர் தேவை

பிரபல மருந்து விற்பனை நிலையம் ஒன்றிற்கு மருந்தாளர் தேவை.

**074 194 5133**

## பணியாளர் தேவை

யாழ்நகரில் உள்ள **புகைப்படக் கலையகத்திற்கு** கணினி அறிவுள்ள இருபாலாரும் தேவை.
(குறிப்பு) முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**309, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**
**077 716 2339**

## சாவகச்சேரி பிரதேச சபை

### பொது அறிவித்தல்

### கொடிகாமம் பொதுச்சந்தையில் உற்பத்திப்பொருட்களிற்கான கழிவு நடைமுறை தொடர்பானது

- விவசாய உற்பத்திப்பொருட்களிற்கு ஏற்கனவே தடை செய்யப்பட்ட 10% கழிவு முறை முற்றாகத் தடை செய்வதை உறுதிப்படுத்த இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- விவசாய உற்பத்திப்பொருட்கள் பொதிகளிலிருந்து அகற்றி தரத்தின் அடிப்படையில் நிறை அளவீடு செய்யப்படும்.
- குத்தகைதாரர் உற்பத்திப்பொருட்களிற்கான சரியான நிறை அளவீட்டினை பற்றுச்சீட்டில் பதிந்து விவசாயிகள் / உற்பத்திப்பொருள் கொண்டு வருவோரிடம் வழங்குதல் கட்டாயமானதாகும்.
- உற்பத்திப்பொருட்களிற்கு உரிய நிறை அளவீட்டின் படி பற்றுச்சீட்டு வழங்கப்படாதவிடத்து அதனைக் கேட்டுப்பெற்றுக்கொள்வது விவசாயிகள் / உற்பத்திப்பொருள் கொண்டு வருபவர்களினது கடமையாகும்.
- குத்தகைதாரரிற்கு உரிய விலையில் 4% வரி விவசாயிகளால் / உற்பத்திப்பொருள் கொண்டு வருபவர்களினால் வழங்கப்படவேண்டும்.
- சந்தை வியாபாரிகள் பற்றுச்சீட்டில் பதிவு செய்யப்பட்ட நிறைக்கு உரிய விலையை விவசாயிகள் / உற்பத்திப்பொருள் கொண்டு வருபவர்களிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன் கழிவு ஏதும் விதிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டால் சந்தை இட ஒதுக்கீடு / வியாபார அனுமதி இரத்து செய்யப்படும்.
- உற்பத்தியாளர்கள் இந்நடைமுறைக்கு முரணாக குத்தகைதாரர் மற்றும் வியாபாரிகளுடன் எந்த வித புரிந்துணர்வு உடன்பாட்டிற்கும் வருவது தடை செய்யப்படுகின்றது.
- குறித்த விடயம் தொடர்பாக இறுக்கமான கட்டுப்பாடுகள், மேற்பார்வை இடம்பெறும் என்பதால் சகலரது ஒத்துழைப்பும் கோரப்படுகின்றது.
- முறைப்பாடுகளுக்கு 021 2050356, 021 2050348 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.

## கேள்வி மனு கூறல்

காரைநகர் அபிவிருத்தி சபைக்கு சொந்தமான சிறிய ரக **நீர்த்தாங்கி வாகனம்** (5000 லீற்றர் வாகன வகை ISUZU) விற்பனை செய்ய நிர்வாகம் தீர்மானித்திருப்பதால் ஆகக்கூடிய விலை கூறுபவர்களுக்கு வாகனம் விற்கப்படும்.

வாகனம் பார்வையிட வேண்டிய இடம்

**காரைநகர் அபிவிருத்தி சபை**
**மணற்காட்டு அம்மன் வீதி,**
**காரைநகர்**

**T.P : 021 221 1757, 077 977 8784**

**குறிப்பு : 11.03.2021 தொடக்கம் 25.03.2021** வரையான காலப்பகுதியில் வாகனத்தை நேரடியாக பார்வையிட்டு விலை மனு கூறலை மேற்காணும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**பதிவுத்தபால் கிடைக்க வேண்டிய இறுதி திகதி 28.03.2021**

**தலைவர்**
**திரு.இ.சிவசுப்பிரமணியம்.**

## AL - 2023

**Maths & Bio Stream**
**(Engish Medium)**
**Through zoom**
Commencing on
**14.03.2021 Sunday**

**Physics**
S. Srikanagasabai *M.sc*
Tue & Fri: 6.00 pm - 7.30 pm

**Chemistry**
S.V.Selvaranjan *B.Sc*
Fri : 8.00 pm - 9.30 pm
Wed : 6.00 pm - 7.30 pm

**Biology**
R.Mahima *B.Sc*
Wed & Sun: 8.00 pm - 9.30 pm

**Com. Maths**
V.Rajaratnam *B.Sc*
Sat & Sun: 8.30 am 10.00 am
S.Premnath *B.Sc*
Sat & Sun: 8.00 pm - 10.00 pm

**ICT**
R. Mathisugan *B.Sc*
Wed: 2.30 pm - 4.30 pm

**Noble Academy**
6C, Ramakrishna Terrace,
Wellawatte Colombo - 06
Tel : 011 236 3831, 011 236 0848
Whatsapp Message only : 076 758 0659

## AL - 2023

**கணித, உயிரியல் பிரிவு**
**தமிழ்மொழிமூலம்**
**zoom ஊடாக**
ஆரம்பம்: 14.03.2021

**இணைந்த கணிதம்**
S.Premnath *B.Sc*
Sat & Sun : 6.00 pm-8.00 pm
V.Rajaratnam *B.Sc*
Sat & Sun : 5.15 pm-6.45 pm

**உயிரியல்**
V.Umashanger *B.Sc*
Wed & Sun : 6.00 pm-7.30 pm
R.Mahima *B.Sc*
Tue : 8.00 Pm-9.30 pm

**பௌதிகவியல்**
S.R.Jeyakumar *B.Sc*
Wed,Thu & Fri : 8.00 pm-9.00 pm

**இரசாயனவியல்**
V.Parameshwaran *B.Sc*
Mon,Tue &Sat : 8.00 pm-9.00 pm

**ICT**
R.Mathisugan *B.Sc*
Wed: 2.30 pm-4.30 pm

**Noble Academy**
6C Ramakrishna Terrace,
Wellawatte Colombo - 06.
011 236 3831, 011 236 0848
Whatsapp: 076 758 0659 (Message only)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16.03.1933

மறைவு
04.03.2019

### திரு. அருணாசலம் சிதம்பரநாதன்

திதி : திரியோதசி
(11.03.2021 வியாழக்கிழமை)

விடிவெள்ளியாய் எமை வழிநடத்தும்
அப்பாவே
இன்முகம் காட்டி எம் இல்லத்தை செழிப்
பாக்கி
பார் போற்ற வாழ வைத்த எம் தந்தை
பரன் அடி சேர்ந்து ஈராண்டு ஆனதுவே.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**குடும்பத்தினர்.**
**புத்தூர் வடக்கு, புத்தூர்**
**021 205 8888**

## மரண அறிவித்தல்



### கந்தையா மாணிக்கம் (பேத்தி)

மடத்தடி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மாணிக்கம் (பேத்தி) அவர்கள் 10.03.2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னர் லட்சுமியின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா (யோன்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பர் சின்னாச்சியின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, கந்தையா, நாகம்மா மற்றும் ரஞ்சிதமலர் ஆகியோரின் சகோதரியும், சற்குணதேவி, சற்குணலிங்கம், சந்திரகுமார், சற்குணரத்தினம், சந்திரசேகரம், சௌந்தர்ராயன், சகுந்தலாதேவி, சறோஜாதேவி, சஜீலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசையா, புஸ்பராணி, அமிர்தலீலா, கமலாவதி, லோகேஸ்வரி, தாரணி, கமலதாஸ், காந்தராசா, உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2021) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மடத்தடி,**
**சண்டிலிப்பாய்**

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
29
06
1937



மறைவு
09
03
2021

### சின்னத்தம்பி சுவாமிநாதபிள்ளை

**(ஓய்வுநிலை விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்)**

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் "சிவபூமி" தொல்புரம் சுழிபுரத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுவாமிநாதபிள்ளை 09.03.2021 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை-பெண் நாகம்மாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.03.2021 காலை 9.00 மணியளவில் "சிவபூமி" தொல்புரம் சுழிபுரத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் தொல்புரத்தில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: கைலாயபிள்ளை கார்த்திகேசு**
**(சகோதரி மகன்)**

## கோண்டாவில்

காரைநகர் சாலையில் பணியாற்றும் மூன்று செலுத்துநர்கள், மூன்று நடத்துநர்கள் மற்றும் இரு காப்பாளர்கள் உள்ளிட்ட எட்டுப் பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளமை அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டது. பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் துறைக்குள் கொரோனா வைரஸ் ஊடுருவியதால் பிறிதொரு கொத்தணி ஏற்படலாம் என்று அச்சம் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் காரைநகர் சாலையில் நடத்துநர்களாகப் பணிபுரியும் மேலும் இருவருக்கு நேற்றுத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கோண்டாவில் சாலையில் பணிபுரியும் இருவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது. அங்கு மேலும் சிலரிடம் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்துச் சாலைகளை மையமாக வைத்து பிறிதொரு கொத்தணி உருவாகலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)


## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர் **திரு.ந.யோகேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தாய்

**மகேஸ்வரி நல்லசேகரம்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிராந்திய முகாமையாளரும், சக ஊழியர்களும்.**
**பிராந்திய காரியாலயம் (வடக்கு)**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**



## மரண அறிவித்தல்

**மார்க்கண்டு செந்தில்நாதன்**



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18.01.1976 | 10.03.2021 |

கைதடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு செந்தில்நாதன் (தவில் வித்துவான்) அவர்கள் நேற்று (10.03.2021) அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2021) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**



ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

(இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காதான் தாழ் வாழ்க)

கடந்த 11.02.2021 வியாழக்கிழமை
இறைவனடி சேர்ந்த

**அமரர் நமசிவாயம் தர்மலிங்கம்**

(சின்னன்னை) (ஆசாரி)

அன்னை மடியில் 10 . 08 . 1933



ஆண்டவன் மடியில் 11 . 02 . 2021

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.03.2021) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளைமறுதினம் (13.03.2021) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு நமசிவாயம் தர்மலிங்கம் அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு விரைந்து வந்து அனைத்து விதமான உதவிகளையும் வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் தொலைபேசி, மின்னஞ்சல் வழியாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளை நடத்துவதற்கு உதவிய குருமார்களுக்கும், போசன உதவிகள், சரீர உதவிகள் வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவி ஒத்தாசை வழங்கிய அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

15/16, நடுத்தெருலேன்,
(அன்னை இல்லம்)
அரியாலை, யாழ்ப்பாணம்.
077 910 3392

குடும்பத்தினர்


## வடக்கில்...

பாணம் மாவட்டத்திலும் ஒருவர் கிளிநொச்சி மாவட்டத்திலும் 6 பேர் வவுனியா மாவட்டத்திலும் கண்டறியப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 368 பேரின் மாதிரிகளும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 20 பேரின் மாதிரிகளும் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 27 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

**தெல்லிப்பழையில் மூவர்**

இந்த 27 பேரில், 3 பேர் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்கள் மூவரும் நேற்றுமுன்தினம் சுன்னாகத்தில் தொற்றுக்குள்ளான இலங்கை வங்கி ஊழியருடன் நேரடித் தொடர்புடையவர்கள்.

**கோண்டாவில் சாலையில் இருவர்**

மேலும் இருவர் இ.போ.ச.வின் யாழ்ப்பாணம் கோண்டாவில் சாலையில் கண்டறியப்பட்டுள்ளனர். அங்கு 30 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டன. அவர்களில் ஒருவர் சாரதி பயிற்றுவிப்பாளர். மற்றையவர் சாலை அலுவலகத்தில் பணியாற்றுபவர்.

**நல்லூரில் மூவர்**

மேலும் மூவர் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களில் இருவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தொற்றுக்குள்ளான மார்ஷல் அதிகாரியின் குடும்ப உறுப்பினர்கள். மற்றையவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் பணியாற்றுபவர்.

**யாழ். நகரில் ஒருவர்**

யாழ்ப்பாணம் நகரில் கே.கே.எஸ். வீதியில் கருவாட்டுக் கடை நடத்தும் ஒருவருக்கும் கோரோனாத் தொற்றுள்ளமை நேற்றுக் கண்டறியப்பட்டது.

**சிறையில் ஐவர்**

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் மேலும் 5 கைதிகளுக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

**காரைநகர் சாலையில் இருவர்**

இ.போ.ச.வின் காரைநகர் சாலையில் மேலும் 2 நடத்துநர்களுக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர எல்லையில் உள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

**ஊர்காவற்றுறையில் மூவர்**

அத்துடன் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனையில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த மூவருக்கு தொற்று உள்ளமை இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியாவில் ஆறு பேர்**

வவுனியா பொதுமருத்துவமனையில் 4 பேருக்குத் தொற்று உள்ளமை இன்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 3 பேர் வெளிநாடு செல்வதற்காக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டவர்கள். ஒருவர் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட போது மாதிரிகள் பெறப்பட்டவர்.

செட்டிக்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சியில் ஒருவர்**

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட முறிகண்டியைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ம-26)


## கடை வாடகைக்கு

கே.கே.எஸ் வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள கடைத்தொகுதி வாடகைக்குண்டு.

077 398 5120



## வேலையாள்கள் தேவை

பளையில் அமைந்துள்ள
**தென்னந்தோட்டத்திற்கு**
தங்கி இருந்து வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை.
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

071 129 8464


## மன்னார்....

அமைவாக திருக்கேதீச்சர திருத்தலத்தின் மகா சிவராத்திரி திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இதன்படி, 500 பொலிஸார் கோவிலில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். சுகாதாரத் துறையினர் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்குரிய உள்வரும் வெளிச் செல்லும் வழித்தட நடைமுறைகளையும் அடியவர்கள் மேற்கொள்ள வேண்டிய சுகாதார நடைமுறைகளையும் மிகவும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

வழமையான சிவராத்திரி திருவிழாக்களில் மேற்கொள்ளப்படுகின்றமையைப் போலவே இந்தமுறையும் மின்சாரம் உட்பட அனைத்து ஒழுங்குகளும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன. பாலாவி தீர்த்தக் கேணியில் நீராடுவது, தீர்த்தம் எடுப்பது மற்றும் அங்காடித்தெரு அமைப்பது என்பனவற்றுக்கு கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுகாதாரத் துறையினர் தடைவிதித்துள்ளனர்.

எனினும், திருவிழா பூஜை ஒழுங்குகள் அனைத்தும் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் திருப்பணிச் சபையினர், கோவில் சிவாச்சாரியார்கள் மற்றும் சிவதொண்டர்கள் ஆகியோர் இணைந்து மேற்கொண்டுள்ளனர் என்று திருக்கேதீச்சர திருப்பணிச் சபையினர் தெரிவித்தனர். (த-213)

## கிளிநொச்சி...

ரிழந்தார். புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் நோக்கி ஒரே திசையில் பயணித்துக்கொண்டிருந்த கனரக வாகனத்துடன், மோட்டார் சைக்கிள் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதன் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த விசுவமடு பகுதியைச் சேர்ந்த குணராஜாஜெனோயன் (வயது - 20) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார். கனரக வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று சம்பவத்தை அவதானித்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ப-113-6)


## மரண அறிவித்தல்



**ஜெகநாதன் விக்னேஸ்வரன்**

மேகன்டைல் பாதுகாப்பு சேவை தனியார் நிறுவனம்.
கொமஷல் வங்கி, சுன்னாகம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21.06.1947 | 10.03.2021 |

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகநாதன் விக்னேஸ்வரன் நேற்று (10.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெகநாதன் நல்லம்மா (கிச்சி ரீச்சர்) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பகீரதன் (லண்டன்), ரமணி (அவுஸ்திரேலியா), ரஜனி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், லோகேஸ்வரி, செகராஜசேகரம், சண்முகதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கலாரூபி, சயந்தன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், பிரதீபன், சயாமா, சயானன், நீரஜா ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஸ்வரபதி
1ஆம் கட்டை,
உடுவில்.

தகவல்: மனைவி
076 705 2858
021 225 5927

## இஸ்லாமிய...

இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் 676 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 200 பேர் சிறையில் இருக்கின்றனர். 66 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். 608 பேருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிணை வழங்கப்பட்டிருந்தாலும் அவர்கள் தொடர்பிலும் விசாரணைகள் தொடர்கின்றன. ஈஸ்டர் தாக்குதலுக்கு முன்னர் பல சம்பவங்கள் இடம்பெற்றன. அவை குறித்து உரிய கவனம் செலுத்தி, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் தாக்குதலைத் தடுத்திருக்கலாம். ஆனால் கடந்த ஆட்சியின்போது புலனாய்வுத் துறை பலவீனமான நிலையில் இருந்தது. தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

**தவறவிடப்பட்ட 9 வாய்ப்புகள்**

குறிப்பாக 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உறுப்பினர் அப்துல் பர்சாட்டின் வீடு மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவம் நடைபெற்று 6 நாள்களின் பின்னர் காத்தான்குடியிலுள்ள அக்கட்சியின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. 6 மாதங்களுக்கு பிறகு மட்டக்களப்பு பாலமுனை பகுதியில் வெடிபொருள்கள் பரிசோதனையின் போது சஹ்ரானின் சகோதரர் ரில்வான் படுகாயமடைந்தார். இச்சம்பவம் நடைபெற்று இரண்டரை மாதங்களுக்கு பின்னர் பயிற்சி முகாம்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டாலும், விசாரணைகள் நடைபெறவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்று ஒரு மாதத்துக்கு பின்னர் மாவன்னல்ல பகுதியில் புத்தர் சிலை சேதமாக்கப்பட்டது. மூன்று வாரங்களுக்கு பிறகு வனாத்தவில்லு பகுதியில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. இச்சம்பவம் இடம்பெற்று 2 மாதங்களுக்கு பிறகு தலசீம என்பவர்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஈஸ்டர் தாக்குதலுக்கு 5 நாள்களுக்கு முன்னர் காலங்குடா பகுதியில் மோட்டார் சைக்கிளை வெடிக்க வைத்தனர். இவை குறித்து உரிய வகையில் விசாரணை நடத்தியிருந்தால் ஈஸ்டர் தொடர் தற்கொலைத் தாக்குதலை தடுத்திருக்கக் கூடும். 9 சந்தர்ப்பங்களை கடந்த அரசு நழுவவிட்டுள்ளது.

**சஹ்ரானின் மகளிர் படையணி**

எமது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் புலனாய்வுத் துறை பலப்படுத்தப்பட்டது. தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. ஈஸ்டர் தாக்குதலுடன் நேரடியாக முறைமுகமாக தொடர்புபட்ட 99 பேர் இலங்கையில் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன், வெளிநாடுகளில் இருந்த இந்நாட்டு பிரஜைகள் 35 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளுடன் இணைந்து 5 நாடுகளில் இருந்து 54 பேர் கைதுசெய்யப்பட்டனர். 50 பேர் இதுவரை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். ஏனைய நால்வர் அந் நாடுகளில் வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர் அழைத்துவரப்படுவார்கள். சஹ்ரானிடம் பயிற்சி பெற்ற பெண் பிரிவு தொடர்பில் 2020 ஆம் ஆண்டில் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்தது. 17 பேர் தற்கொலைத் தாக்குதலுக்கான உறுதிமொழியை வழங்கியுள்ளனர். 17 பெண்களில் ஐவர் உயிரிழந்துள்ளனர். மூவர் சிறைவைக்கப்பட்டுள்ளனர். எழுவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படு கின்றனர். ஏனைய இருவரைக் கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இஸ்லாமிய அரசைக் கட்டியெழுப்ப சஹ்ரான், மதவாச்சி, வன்னி, தியவெல்ல அம்பாந்தோட்டை, நுவரெலியா, ஹிங்குல உள்ளிட்ட பகுதிகளில் நடத்தி வந்த 8 பயிற்சி முகாம்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த முகாம்களுடன் தொடர்புடையவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

**யார் இந்த நௌபர்?**

2018ஆம் ஆண்டு முதல் சஹ்ரானின் அனைத்து தேவைகளுக்கு நிதியையும் வாகனங்களையும் தெமட்டகொட இப்ராஹிம் சகோதரர்களே வழங்கியுள்ளனர். இவர்கள் 2018ஆம் ஆண்டு முதல் தாக்குதல் வரையான காலப் பகுதி வரை 500 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளனர். 2014ஆம் ஆண்டு இஸ்லாமிய அரசுக்கான பிரகடனத்தை ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி வெளியிட்டார்.

சிரியாவுக்கும், ஈராக்குக்கும் வந்து, இஸ்லாமிய அரசுக்காக சமராடுமாறு அழைப்பும் விடுத்திருந்தார். ஐ.எஸ். அமைப்பின் தலைவரின் இந்த அறிவிப்பையடுத்து 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் இலங்கையிலிருந்து சுமார் 37 பேர் சிரியா சென்று, ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து செயற்பட்டனர்.

சஹ்ரானும் இஸ்லாமிய அரசு கோட்பாடுக்காக செயற்பட்டு, மத அடிப்படைவாதியாக மாறினார். 2017ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மத அடிப்படைவாதத்திலிருந்து வன்முறையை நோக்கி சஹ்ரான் பயணித்துள்ளார். 2017ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் திகதி காத்தான்குடியில் மாற்றுக் கருத்துடையவர்களை தாக்கியுள்ளமை சஹ்ரானின் முதலாவது வன்முறைச் சம்பவமாகும்.

அதேவேளை நீண்ட காலமாக கட்டாரில் இருந்து, தற்போது கைதாகியிருக்கும் மொஹமட் இப்ராஹிம், மொஹமட் நௌபர் என்பவர், 2016ஆம் ஆண்டிலிருந்து சஹ்ரானுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிவந்துள்ளார். ஐ.எஸ். தலைவரின் கருத்தியலுடன் சஹ்ரானை இவரே தொடர்புபடுத்தியுள்ளார். சஹ்ரானுடன் தொடர்பை ஏற்படுத்தி, தாக்குதல்வரை சஹ்ரானை கருத்தியல் ரீதியில் அவரே வழிநடத்தியுள்ளார். சி.ஐ.டி. மற்றும் ரி.ஐ.டி. ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணையில் இது உறுதியாகின்றது.

தாக்குதலுக்கு முன்னர் சஹ்ரான் உள்ளிட்ட குழுவினர், ஐ.எஸ். அமைப்பின் அபுபக்கர் அல் பக்தாதிதான் தமது தலைவர் என உறுதியெடுத்தனர். இஸ்லாம் அரசுக்காகவே இத்தாக்குதல் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

**11 அமைப்புகளுக்குத் தடை**

மதரஸாக்களில் உரிய கல்வி முறைமைகள் இல்லை. 5 வயது முதல் 10 வயதுவரை அரச கல்விக் கொள்கையின் கீழ் மாணவர்களுக்கு கல்வியைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென அவதானம் செலுத்தியுள்ளோம். இந்தக் கொள்கையின் பிரகாரம் செயற்படாத பாடசாலைகள் அனைத்தும் தடைசெய்யப்படும். ஏனைய மதரஸா பாடசாலைகளை கல்வி அமைச்சுடன் இணைத்து தரநிர்ணயம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அடிப்படைவாதச் செயற்பாடுகளுக்கு செல்பர்கள் தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்ததும் அவர்களை உடனடியாகக் கைதுசெய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்பவும் முடிவெடுக்கப் பட்டுள்ளது. அதே போன்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன. முகத்தை முழுமையாக மூடும் ஆடைகளுக்கும் தடைவிதிக்கப்படும்- என்றார். (ம-ஒ.44)

## 141 கிலோ...

பட்டுள்ளது.

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. குறித்த பொதிகள் இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்பட்ட நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளன என்றும் மன்னாரைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-26)

## சுகாதார...

பாணம் நகுலேச்சரம், திருகோணமலை கோணேச்சரம், முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம், சிலாபம் முன்னேச்சரம் மற்றும் மாத்தறை தொண்டீச்சரம் ஆகிய சிவாலயங்களில் மட்டுமன்றி ஏனைய இந்துக் கோவில்களிலும் சிவராத்திரி விரதம் இன்று பக்தி பூர்வமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. சிவராத்திரியையொட்டிய விசேட வழிபாடுகளும் நடைபெறவுள்ளன. எனினும், இந்த வருடம் கொரோனா அச்சம் காரணமாக சுகாதார கட்டுப்பாடுகளுடன்சிவராத்திரி பூஜைகளை நடத்த ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

## சா/த....

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். கொழும்பு கோட்டைப்பகுதியில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்துக்கு நேற்றுச் சென்ற அவர் அங்கு உரையாற்றுகையிலேயே மேற்படி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்விப் பொதுத் தராதர பரீட்சைக்கான மதிப்பீடுகள் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகும். அழகியல் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் தொடங்கும்.

பரீட்சைகள் ஆரம்பிக்கும்போது கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களாக 38 மாணவர்களே இருந்தனர். ஆனால் தற்போது 62 மாணவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். நாம் அனைத்துக்கும் தயாராக இருந்ததால் நிலைமையைக் கையாண்டோம். ஜூன் மாதத்தில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட்டு ஜூலை மாதத்தில் உயர்தரப் பரீட்சைக்கான வகுப்புக்களைத் தொடங்க முடியும் - என்றார். (ம)

## ஐ.நா.வின்...

தெரிவித்துள்ளது. உலகெங்கும் போராலும், இனப்படுகொலைகளாலும் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான நீதியைப் பெற்றுக்கொள்வதில், ஐ.நா.வின் தலையீடு தற்போது கேள்விக்குறியாகியுள்ள நிலையில், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் நிறுத்துவதன் மூலம், தனது கடந்தகால தவறுகளை சரிசெய்வதற்கு ஐ.நா.வுக்கு தற்போது வாய்ப்புக் கிட்டியுள்ளது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள் ளது.

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு தொடர்பில், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஐ.நா. அங்கத்துவ நாடுகளுக்கு அனைத்துலக தொடர்பாடலுக்கான அமைச்சர் மாணிக்கவாசகர் காணொலி வாயிலாக முன்வைத்திருந்தார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 12 ஆண்டுகளாக நாங்கள் இன்னமும் நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்காகக் காத்திருக்கிறோம். ஐ.நா. தீர்மானங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் தொடர்ந்து இணங்காதது, மற்றும் போர்க் குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் உட்பட இடைக்கால நீதி வழிமுறைகளை நிறுவுவதில் தாமதம் என்பன போரில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு உண்மை மற்றும் நீதியை வழங்குவதைத் தவிர்ப்பதற்கான ஒரு முயற்சியாகும்.

உங்களது தற்போதைய தீர்மான வரைவு, பாதிக்கப்பட்டவர்களை மேலும் துன்பத்துக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாக்குவதோடு, இலங்கை இனவாத அரசுக்கும் அதன் குற்றவாளிகளுக்கும் மேலதிக நேரமும் வெகுமதியும் அளிப்பதாக அமைகிறது.

உலகெங்கும் போரால் பாதிக்கப்பட்டவர்கள், கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை, போர்க் குற்றங்கள் என்பவை மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு உட்படுத்தப்படுவதால் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தேவை இப்போது கேள்விக்குறியாகியுள்ளது. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் நிறுத்துவதன் மூலம், தனது தலைமைத்துவத்தைக் காண்பிப்பதற்கும், கடந்த காலத் தவறுகளை சரிசெய்வதற்கும், முன்னேறுவதற்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இது ஒரு வாய்ப்பாக அமையும்- என்றார். (ம)

## குற்றவாளிகளைப்....

வாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று அரசு அறிவித்திருந்தது. இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: குறைபாடுகள் நிறைந்திருக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையை வைத்து அரசு காலத்தை இழுத்தடிக்குமானால் நாம் சர்வதேச நீதிமன்றத்தின் உதவியை நாட நேரிடும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர்கள், அதற்கு நிதியுதவி வழங்கியவர்கள், தாக்குதலுக்கு நேரடியாக மறைமுகமாக ஒத்துழைப்பு வழங்கியவர்கள் போன்றோர் தொடர்பில் விரிவான விசாரணைகளை அரசு நடத்த வேண்டும். ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையை வைத்துக்கொண்டும் அதை ஆராய இன்னொரு ஆணைக் குழுவை நியமித்தும் காலத்தை வீணடிக்கும் செயலில் அரசு ஈடுபடக்கூடாது- என்றார். (ம-ஒ.ஐ.22)

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

**தொழினுட்பப் பிரிவு**
**புதிய பிரிவு A/L 2023**
**Day Class A/L 2021**
ஆரம்பம் **2021.03.14** காலை 9.30 மணிக்கு
077 248 7774 , 021 221 7860, 076 552 9093

**A/L 2023**
**கலை | வர்த்தகம்**
**கணிதம் | உயிரியல்**

**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

ஆரம்பம் **12.03.2021** வெள்ளி காலை 9.00 மணி

குறிப்பு: A/L 2023ல் புதிதாக இணையவுள்ள மாணவர்கள் தமது பாடத் தெரிவினை மேற்கொள்வதற்கும் மாணவர் முன்னேற்றத்தை சிறப்பாக வழிநடாத்தவும் கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல் பாடங்களின் புலமை வாய்ந்த ஆசிரியர்களினால் மார்ச் மாத கட்டணமின்றி விசேட வழிகாட்டல் சேவை வழங்கப்படுகின்றது.

A/L 2021, 2022, DAY CLASS
வகுப்புக்கள் நடை பெறுகின்றன..
Tel: 076 166 1986

**வீடு வாடகைக்கு உண்டு**
கிளிநொச்சியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
**077 835 5464**

## Vacancy

- Data Entry Operator
- Clerk (Female)
- Store Keeper
- Sales Rep (AD Licence)

**T.P: 074 138 3368**

## காணி விற்பனைக்கு

நல்லூர் செம்மணி வீதியில் நாயன்மார்கட்டில் 6 பரப்புக் காணி (மெயின் றோட்டில்) விற்பனைக்கு.
**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.**
**தொடர்பு:**
**077 288 0152**
**077 623 4204**
**077 505 8561**

# சிவராத்திரிதின வழிபாடுகளில் 50 பேர் பங்குபற்ற அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 11

கோவில்களில் நடைபெறவுள்ள சிவராத்திரி வழிபாடுகளில் ஆகக் கூடியதாக 50 பேரை மட்டும் அனுமதிக்குமாறும் ஏனையோர் தத்தம் வீடுகளில் தங்கி நின்று எங்கும் நிறைந்துள்ள இறைவனை மனதிலிருத்தி வழிபடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

மேலும் சிவராத்திரி நாளுடன் இணைந்து கோவில்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாசார நிகழ்வுகளை நிறுத்தி தனியே சமயாசார கிரியை நிகழ்வுகளை மட்டும் நடத்துமாறும் கேட்கப்பட்டுள்ளனர். இந்த வேண்டுகோளுக்கு இந்து மதகுருமார்கள், இந்து மதத் தலைவர்கள், கோவில் அறங்காவலர் சபையினர், பக்தர்கள் மற்றும் பொது மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (சு-26)

## தாதியர், மருந்தாளர் தேவை

பிரபல தனியார் மருத்துவ நிலையமொன்றிற்கு தாதியர், மற்றும் மருந்தாளர் தேவை அனுபவம் உள்ளவர்கள் மற்றும் தாதியர் பயிற்சி நெறிக் கற்கை முடித்தவர்கள் விரும்பத்தக்கது.

**சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.**

தொடர்புகளுக்கு
**077 202 1415**

## காணி விற்பனைக்கு

யாழ் கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப் பரப்பு) பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடைதூரம் விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்
(தரகர் தேவையில்லை)
**077 596 3845, 076 640 0974**


## Techno World
**தொழில்நுட்பக் கல்லூரி**
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

A/L 2023
**தொழினுட்பப்பிரிவு ஆரம்பம்**
14.03.2021 ஞாயிறு காலை 09 மணி

- பொறியியல் தொழினுட்பம்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- உயிர்முறைமைகள் தொழினுட்பம்

**077 017 5346**

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 01 . 1955
இறப்பு 09 . 03 . 2021

### ஆறுமுகம் தியாகராஜா (கிளி)

காரைநகர் இடைப்பிட்டியை பிறப்பிடமாகவும் மார்க்கம், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட தியாகராஜா ஆறுமுகம் (கிளி) அவர்கள் 09.03.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்தையாபிள்ளை கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், கந்தசாமி, சுப்பிரமணியம், விமலாதேவி, அம்பலவாணர், நடராஜா, தங்கமலர் ஆகியோரின் அன்பு சகோதரனும், தவராணி, தனலட்சுமி, காலஞ்சென்ற கந்தையா, இராஜேஸ்வரி, சுபத்திரா, நாகரத்தினம், காலஞ்சென்ற தர்மராஜா, புவனேஸ்வரி, காலஞ்சென்ற பாலா கனகலிங்கம், காலஞ்சென்ற பாலாசந்திரன், தம்பிராஜா, காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், பாலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், யூகேந்திரன் (மயூரன்), கவிதா, சயனுதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிரியை:
Thursday, March 11.2021 from 6.00 am to 7.30 am, Chapel Ridge Funeral Home, 8911, Woodbine Avenue, Markham, ON, L3R 5G1

தகனம்:
Thursday March, 11.2021 at 8.00 am, Higland Hills Crematorium, 12492, Woodbin Avenue, Gomley, ON LOH 1GO

நேரடி ஒளிபரப்பு: (Live Stream): https://video.ibm.com/channel/chapelridgeth2

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
இராஜேஸ்வரி (மனைவி) - 647 673 7253
யுகேந்திரன் (மகன்) - 647 606 2658
கந்தசாமி (சகோதரன்) - 416 569 1421
அம்பலவாணர் (சகோதரன்) - 905 471 4126
நடராஜா (சகோதரன்) (ராசன்)- 613 864 1156
தம்பிராஜா (மைத்துனர் - 94 777 301 961
பாலேஸ்வரி (மைத்துனி) - 94 772 977 651

## NEW SCIENCE HALL
**KANNATHIDDY ROAD, JAFFNA.**

# 2023 A/L
## கணித, உயிரியல் பிரிவு
**நேரடி வகுப்புக்கள், நிகழ் நிலை வகுப்புக்கள்**

| தமிழ் மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS** | **PHYSICS** |
| திரு.S.சோதிலிங்கம் | MR.S. SOTHILINGAM |
| திரு.M.குகனேஸ்வரன் | MR.M. KUGANESWARAN |
| திரு.G.பிரபா | |
| திரு.N.கபிலன் | |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| MR.G.BENO | MR.G.BENO |
| MR.T.சுசாந்தன் | MR.S.V.SELVARANJAN |
| MR.S.T.உமாசங்கர் | |
| MR.K.சிவத்திரன் (நிகழ்நிலை வகுப்பு) | |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| திரு.V.S.குணசீலன் | MR.V.S.GUNASEELAN |
| திரு.K.ராகவன் | MR.S.P.NAGANATHAN |
| திரு.T.கெங்காதரன் | |
| **COM.MATHS** | **COM.MATHS** |
| திரு.P.செந்தில்நாதன் | MR.P.SENTHILNATHAN |
| திரு.S.சிவகரன் | MR.S.SIVAKARAN |

**ஆரம்பம்: 14.03.2021**
ஞாயிற்றுக்கிழமை 09.30 A.M
**தொடர்பு :0777 917611, 076 569 3006**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.